# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 3 ஞாயிற்றுக்கிழமை (19-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:266


## தாழப் பறக்கும் பயிற்சியின்போது அனர்த்தம்

# 'மிக்-27' ரக குண்டு வீச்சு விமானம் சீதுவையில் விழுந்து நொறுங்கியது!

## உக்ரையின் விமானி உடல் சிதறிப் பலி 2 வீடுகள் தரைமட்டம்; 7 பேர் காயம்

கொழும்பு,ஓகஸ்ட்19

**ஸ்ரீலங்கா விமானப் படையின் 'மிக்-27' ரக ஜெட் குண்டு வீச்சு விமானம் நேற்று தாழப் பறந்து பயிற்சியில ஈடுபட்ட சமயம் கட்டுநாயக்காவுக்கு அருகே சீதுவையில் விழுந்து நொறுங்கி, சிதறி எரிந்தது. அதன் விமானியான உக்ரையின் நாட்டவர் உடல் சிதறிப் பலியானார்; விமானம் விழ்ந்ததால் இரு வீடுகள் தரைமட்டமாகின; மற்றைய வீடு ஒன்றும் கடை ஒன்றும் சேதமடைந்தன. வீடுகளில் இருந்த ஏழு பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.**

ரஷ்யத் தயாரிப்பான இந்த விமானம் மற்றொரு 'மிக்' விமானத்துடன் இணைந்து வழமையான கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் சீதுவை நகரப் பகுதியில் - கட்டுநாயக்காச் சந்திக்கு அருகாமைக்கும் இடையில் - நேற்று முற்பகல் 11.18 மணிக்கு விழுந்து நொறுங்கியது.

முற்பகல் 11.15 மணிக்கு கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் சற்று நேரத்தில் தலைகீழாகச் செங்குத்தாகக் குத்திபடி எரிந்துகொண்டு வந்து வீடு ஒன்றின் மீது விழுந்து நொறுங்கி, வெடித்துச் சிதறியது.

கட்டுநாயக்கா - நீர்கொழும்பு வீதியில் - இருபதாவது மைல் கல்லில் - கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வடக்கே சுமார் 2 கிலோ மீற்றர் தொலைவில் - விமானம் வீழ்ந்துள்ளது.

விமானம் வீழ்ந்த இடத்திலிருந்த இரண்டு வீடுகளும் தரைமட்டமாகின. வீட்டினதும் விமானத்தினதும் சிதைவுகள் ஒன்றோடு ஒன்று கலந்து ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன.

பெயர் தெரியாத - சம்பந்தப்பட்ட உக்ரையின் நாட்டு - விமானியின் சடலத்தின் எரிந்த எச்சப் பகுதி மீட்புப் பணியாளர்களால் மீட்கப்பட்டு, பிளாஸ்டிக் பையில் பொதி செய்யப்பட்டு எடுத்துச்செல்லப்பட்டது.

விம[illegible] நொறுங்கி

(2[illegible] பார்க்க)

## இராஜினாமா கடிதம் வழங்க அமைச்சர்கள் பலர் மறுப்பு

கொழும்பு,ஓக.19

திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதியிடம் வழங்குவதற்கு முக்கிய அமைச்சர்கள் பலர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 27பிரதி அமைச்சர்கள் கடந்த வியாழனன்று திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதியிடம் வழங்கியதையடுத்து -

தேசிய அரசு ஒன்றை அமைக்கும் ஜனாதிபதியின் முயற்சிக்கு ஆதரவாக அமைச்சர்களும் தமது இராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பிப்பர் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அமைச்சர்களான எம்.எச்.எம்.பௌசி, மஹிந்த ராஜபக்ஷ, மங்கள சமரவீர, அநுர பிரியதர்ஷன யாப்பா, மஹிந்த விஜயசேகர, நிமால் ஸ்ரீபால டிசில்வா, ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே ஆகியோர்

(2ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துடனான மோதலில் திருமலையில் 6 புலிகள் உயிரிழப்பு

வவுனியா,ஓக.19

திருகோணமலையில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் தமது தரப்பில் 6 பேர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களின் பெயர் விவரங்களை 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு ஒலிபரப்பியது. அவை வருமாறு:-

★ மேஜர் செல்வமுருகன் அல்லது அன்பு (அமிர்தலிங்கம் மதன் - யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் கார்த்திகன் (யோகராஜா ராஜேஸ் - திருகோணமலை)

★ லெப்டினன்ட் இசைச்செல்வன் (மாதவன் விஜயகுமார் - திருகோணமலை)

★ லெப்டினன்ட் கலைச்செல்வி (கனகசபை நாமகள் திருகோணமலை)

(2ஆம் பக்கம் பார்க்க)

## இரு இளைஞர்களின் சடலங்கள் மட்டு. ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

மட்டக்களப்பு,ஓக.19

மட்டக்களப்பு காத்தான்குடிப் பொலீஸ் நிலையத்துக்குள் நுழைய முயன்ற சமயம் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து காத்தான்குடிப் பொலீஸாரால் இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் இரவு மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

அரசடித் தீவைச் சேர்ந்த நவரத்தினராசா சுதர்ஜன் (வயது 23), ஆரையம்பதி தாளங்குடாவைச் சேர்ந்த வெள்ளைத்தம்பி புவனேந்திரராஜன் (வயது18) ஆகியோரே உயிரிழந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த இருவரும் விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக இந்த இரு சடலங்களையும் புலிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்ட போதும் நவரத்தினராஜா சுதர்ஜன் தமது உறுப்பினர் அல்ல என்று தெரிவித்து அவரது சடலத்தைப் பொறுப்பேற்க புலிகள் மறுத்துவிட்டதாக செய்தி ஏஜென்சி ஒன்று குறிப்பிட்டது.

(ம-6)

### ஆயுதக் கொள்வனவில் ஊழலா?

## குற்றச்சாட்டுகளை மறுத்து இராணுவத் தளபதி கடிதம்

கொழும்பு,ஓக.19

ஆயுதக் கொள்வனவில் ஊழல் மற்றும் லஞ்சம் எனத் தெரிவித்து தமக்கு எதிராக 'த சண்டே லீடர்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல மறுத்துள்ளார்.

'ஸ்மல் ஏவுகணை' என்ற - இரசாயன ஆயுதம் என்று கூறப்படுகின்ற - ஆயுதக் கொள்வனவு தொடர்பாக "ஸ்மல் ஏவுகணை தொடர்பாகப் பெரும் துர்நாற்றம்" என்ற தலைப்பில் வெளியான இரண்டு பக்கக் கட்டுரையிலேயே இக்குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பதிலளித்து சம்பந்தப்பட்ட பத்திரிகையின் ஆசிரியருக்கு இராணுவத் தளபதி அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இராணுவத் தளபதி என்ற முறை

(14ஆம் பக்கம் பார்க்க)

## பதுளை ரயில் தடம்புரண்டதில் 15 பேர் பலி;81 பேர் படுகாயம்

கொழும்பு,ஓக.19

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி ரயில் அலஸ்கவில என்ற இடத்தில் நேற்று மாலை 3.45 மணியளவில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர்; 81பேர் காயமடைந்தனர்.

நான்கு பெட்டிகள் தடம் புரண்டதாகவும் -

அவற்றில் மூன்று பெட்டிகள் முற்றாகச் சேதமடைந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

12 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மூன்று பேர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் அலஸ்கவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சேதமடைந்த ஒரு ரயில் பெட்டி மற்றைய பெட்டிகளின் கீழ் நசிந்து கிடப்பதால் அந்தப் பெட்டியில் மேலும் சடலங்கள் இருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (ம-6)

## இரசாயன ஆயுதக் கொள்வனவு குறித்து ஐ.நாவிடம் தமிழ் எம்.பிக்கள் முறையிடுவர்

கொழும்பு,ஓக.19

அரசாங்கம் இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது தொடர்பாகவும் -

அதனை வடக்கு - கிழக்குப் போர்முனையில் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய பாரிய அழிவுகள் குறித்தும் -

விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரித்து சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு, ஐ.நாவின் ஆயுதக் குறைப்பு ஆணைக் குழு, இரசாயன ஆயுதங்களைக் கண்காணிக்கும் ஐ.நா. ஆணைக் குழு போன்றவற்றுக்கும், மேற்படி அழிவு தரும் ஆயுத பாவனையைத் தடுப்பதில் தொடர்புடைய ஏனைய சர்வதேசக் குழுக்களுக்கும் அனுப்பி வைப்பது என்று தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையகத்தில் அதன் சிரேஷ்ட உப தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களே மேற்படி தீர்மானத்தை ஏகமனதாக எடுத்தனர்.

இந்தக் கூட்டத்தில் ஐ.தே.கட்சியின் எம்.பிக்களான ஏ.எச்.எம்.அஸ்வர், எம்.ஏ.எம்.மஹ்ரூப், எம்.அப்துல் மஜீத், ரி.மகேஸ்வரன் மற்றும் பி.பி.தேவராஜ், எம்.எஸ்.செல்லச்சாமி, பி.சந்திரசேகரன், கூட்டணி எம்.பிக்களான மாவை சேனாதிராசா, யோசப்

(2ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஷெல் வீச்சு!

வவுனியா,ஓக.19

வவுனியா, பம்பைமடு முன்னணிக் காவலரண் பகுதியில் இருந்து நேற்றிரவு இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் வீச்சு இடம் பெற்றது.

அந்தப் பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமான நடமாட்டங்கள் காணப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவத் தரப்புத் தெரிவித்தது. (ம-164)

## நல்லூரில் நேற்றிரவு களேபரம்!

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ். மாநகரசபை வருவாய்ப் பகுதி அதிகாரிகளுக்கும் கச்சான் வியாபாரி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து யாழ்.மாநகரசபை இந்து விடுதியின் முன்பக்க சுற்றுமதில், குழு ஒன்றினால் இடித்து நொறுக்கப்பட்டது. கல்வீச்சும் இடம்பெற்றது. அப்பகுதியில் நேற்றிரவு 7.30 மணி முதல் சுமார் அரைமணி நேரம் பெரும் களேபரம் நீடித்தது.

நல்லூர்ப் பின்வீதியில் தனக்கு அனுமதி வழங்கப்படாத பகுதியில் கச்சான் வியாபாரம் செய்து வந்த பெண் ஒருவருக்கும் வருவாய்ப் பகுதி அதிகாரிகளுக்கும் இடையில் தொடர்ந்து தகராறு இடம்பெற்று வந்ததாகவும் -

அந்த இடத்திலிருந்து அகலுமாறு வருவாய்ப் பகுதி அதிகாரிகளால் நேற்றுக் காலையில் இருந்து தொடர்ந்து வழங்கப்பட்ட பணிப்பை

(2ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# குடாநாட்டைப் புலிகள் கைப்பற்ற படையினர் இடமளிக்கமாட்டார்கள்!

## குடாநாட்டின் புதிய இராணுவத் தளபதி மக்களுக்குச் செய்தி

யாழ்ப்பாணம்,ஓக.19

"யாழ். குடாநாட்டை புலிகள் கைப்பற்றுவதற்குப் பாதுகாப்புப் படையினர் இடமளிக்கப்போவதில்லை"

யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் புதிய கட்டளை அதிகாரியாகப் பதவியேற்றிருக்கும் மேஜர் ஜெனரல் எஸ்.ரி.கே.விஜேசூரிய யாழ்.மக்களுக்கு விடுத்துள்ள விசேட செய்தியில் இப்படித் தெரிவித்திருக்கிறார். அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அன்பார்ந்த யாழ். மக்களே!

யாழ். குடாநாட்டு மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை கடந்த 16 ஆம் திகதி பொறுப்பேற்றதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையின் பாதுகாப்புக்கும் உங்களின் உயிர்களுக்கும் புலிகளினால் ஏற்படக்கூடிய அழிவுகளை தடுத்து நிறுத்துவதற்கு தேவையான சகல திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வேன் என்பதை நான் பொறுப்புடன் தெரிவிக்கவிரும்புகின்றேன்.

கடந்த சில மாதங்களுக்குள் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை சீர்குலைப்பதில் ஈடுபட்டு வந்த புலிகள் பற்றிய தகவல்களை நீங்கள் வழங்கியதன் மூலம் புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கைதுசெய்ய முடிந்துள்ளது. இதனால்தான் யாழ்மக்களின் வாழ்க்கையை சீர்குலைப்பது தடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்துக்கு அருகில் நிலைகொண்டிருந்த புலிகளைப் பாதுகாப்புப் படையினர் இன்று குடாநாட்டில் இருந்து விரட்டியடித்துள்ளனர். யாழ்.மக்கள் புலிகள் இயக்கத்திற்கு எதிராகச் செயற்படுவதால் இன்று புலிகள் இயக்கம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. இதன் காரணமாகத்தான் மீண்டும் யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றுவோம் எனக் கூறிக்கொண்டு பொதுமக்களை அச்சுறுத்தி பாதுகாப்புப் படையினரிடம் இருந்து மக்களை வேறுபடுத்த புலிகள் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்தை கைப்பற்றப்போவதாக இதற்குமுன் எத்தனையோ தடவைகள் புலிகள் பிரசாரம் செய்துள்ளார்கள்.

புலிகள் இயக்கத் தலைவரின் நிறைவேறாத ஈழம் என்ற கனவை நனவாக்குவதற்கு ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர், யுவதிகளைப் பலிகொடுத்துள்ளமை உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என நினைக்கின்றேன்.

புலிகளின் தலைவர்களினதும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சுகபோகத்துக்காக உங்களது பிள்ளைகளை பலி கொடுத்து வருவதோடு இறுதியில் உங்களுக்கு கிடைக்கப்போகும் விடுதலைதான் என்ன?

யாழ்.மக்களே! யாழ் குடாநாட்டை ஒருபோதும் புலிகள் கைப்பற்றுவதற்கு பாதுகாப்புப் படையினர் இடமளிக்கப் போவதில்லை என்பதை நம்புங்கள். உங்களையும், இலங்கையையும் பாதுகாப்பதற்கு பாதுகாப்புப் படையினர் தமது உயிரையும் மதிக்காது யுத்தத்தில் ஈடுபடுவதை நான் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். அதனால் புலிகளின் தவறான பிரசாரங்களைக் கேட்டு ஏமாறாமல் புலிகள் கடந்த 20 வருடங்களாக மேற்கொண்டுவரும் பிரசாரங்களை குறித்து ஆழமாகச் சிந்தியுங்கள். எமது நாட்டில் உள்ள பொருளாதார வளர்ச்சி நிலையங்கள் மீது புலிகள் நடத்தும் தாக்குதல்கள் காரணமாக எமது பொருளாதாரமே பாதிக்கப்படுகின்றது.

இன்று யாழ்ப்பாணத்தில் நீங்கள் அனுபவிக்கும் அமைதியான வாழ்க்கை, சுதந்திரம் போன்றவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு தொடர்ந்தும் பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பை வழங்கவும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### இரசாயன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரராஜசிங்கம், பி.செல்வராஜா, ரெலோ எம்.பிக்களான ஏ.அடைக்கலநாதன், வினோ நாகராஜலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்க் காங்கிரஸ் எம்.பியான அ.விநாயகமூர்த்திக்கு அழைப்பு அனுப்பப்பட்டபோதும் சுகவீனம் காரணமாக அவர் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டத்தின் பின் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

★ சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட இந்தப் பேரழிவு தரும் நச்சு இரசாயன ஆயுதத்தை வடக்கு - கிழக்கு யுத்தத்தில் பயன்படுத்துவதை தமிழ்ப் பேசும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையாகக் கண்டித்தனர்.

அமெரிக்கப் பாதுகாப்புப் புலனாய்வு ஏஜென்சியின் அறிக்கையின்படி இந்த இரசாயன ஆயுதத்தின் வெடிப்பு முனைப்பகுதி நச்சுத்தன்மையுடையது என்றும், இது ஒருவேளை வெடிக்கத் தவறினாலும் மிகவும் ஆபத்தான ஆயுதம் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த ஆயுதம் மிகவும் நவீன உயர்ரக எரிபொருள், வளியில் வெடிக்கும் தொழில்நுட்பம் என்பவற்றை உள்ளடக்கியதாகும். இதனை ஏவி வெடிக்க வைப்பதன் மூலம் வெளியாகும் புகைமண்டலம் படரும் இடம் எல்லாம் எரித்துச் சாம்பலாக்கிவிடும்.

இந்த ஆயுதம் தாக்கும் இடத்தை எரிப்பது மட்டுமல்லாது, எரியும் வாயு பரவும்போது அதனைச் சுவாசிக்கும் மனிதர்களின் சுவாசப்பைகளைக் கூடப் பாதிக்கக்கூடியது.

இந்த ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதை இராணுவப் பேச்சாளர் பி.பி.ஸி. பேட்டியில் ஒப்புக்கொண்டுள்ளார்.

இதேபோன்ற ஆயுதங்கள் அண்மைக்காலத்தில் விமானப் படையால் வடக்குக் கிழக்கில் பயன்படுத்தப்பட்டதற்குக் கண்கண்ட சாட்சிகளும் உள்ளன.

★ கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்த இராஜதந்திரிகள், ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சமூக - மத அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து இந்த நச்சு இரசாயன ஆயுதக் கொள்வனவு குறித்தும் அது யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டால் ஏற்படும் மிக மோசமான விளைவுகள் குறித்தும் விளக்குவது. அத்துடன் இந்த இரசாயன ஆயுதப் பாவனையை கைவிடுமாறு அரசை வற்புறுத்தும்படி தூதுவர்களிடம் கோருவது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

★ பௌத்த மற்றும் கிறிஸ்தவ குருமார்களைச் சந்தித்து இது தொடர்பாக விளக்குவதுடன் அவர்களையும் அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோருவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ-ம-6)

---

### 'மிக்-27'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்துச் சிதறியதால் எழுந்த தீச்சுவாலை அருகில் உள்ள வீடுகளுக்குப் பரவாமல் தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து அதனை அணைத்துக் கட்டுப்படுத்தினர்.

விமானம் வீழ்ந்த பிரதேசத்தில் அச்சமயம் வீடுகளில் இருந்த ஏழு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ-ம-6)

---

### இராணுவத்துட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ காந்தரூபி (கணபதிப்பிள்ளை சந்திரமலர் - திருகோணமலை)

★ பவித்திரா (மயில்வாகனம் தர்ஷினி - திருகோணமலை) இவர்களே உயிரிழந்தவர்களாவர்.

இதேவேளை -

கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை கிளாலியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் அருள்கனி அல்லது கலைவிழி (ஆரோக்கியம் மலர்விழி - மன்னார்), லெப்டினன்ட் மாலினி (கனகசுந்தரசாமி ஜனார்த்தனி - புதுக்குடியிருப்பு) ஆகியோர் உயிரிழந்ததாகவும் 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது. (ம-164)

---

### இராஜினாமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது இராஜினாமாக் கடிதங்களை வழங்குவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

"எமக்கு ஜனாதிபதியின் மீதும் அரசாங்கம் மீதும் முழு நம்பிக்கை உண்டு. அதற்காக இராஜினாமாக் கடிதங்களை வழங்கித்தான் அதனை நிரூபிக்கவேண்டும் என்பதில்லை. அமைச்சர்கள் இராஜினாமாக் கடிதங்களை வழங்குவது நாட்டு மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்திவிடும்" என்று எம்.எச்.எம்.பௌசி தெரிவித்தார். இதேவேளை -

அமைச்சர்களான ரெஜி ரணதுங்க, அலவி மௌலானா ஆகியோர் திகதியிடப்படாத தமது இராஜினாமாக் கடிதங்களை நாளை திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் வழங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

---

### நல்லூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்ட பெண்மணி உதாசீனம் செய்ததால் தகராறு முற்றியதாகவும்-

இதனை அடுத்து நேற்றிரவு 7 மணியளவில் அந்தப் பெண்மணி வியாபாரத்துக்கு வைத்திருந்த கடலை மற்றும் கச்சான் என்பன வருவாய்ப் பகுதி அதிகாரி ஒருவரினால் நிலத்தில் கொட்டப்பட்டதாகவும் - கூறப்படுகின்றது.

இதனையடுத்து ஒன்றுதிரண்ட சுமார் 50 பேர் வருவாய்ப் பகுதி அலுவலகம் அமைந்திருந்த இந்து விடுதியை முற்றுகையிட்டனர். அங்கு பெரும் களேபரம் ஏற்பட்டது.

எனினும் தகவல் கேள்விப்பட்டு அங்கு விரைந்த யாழ்.மாநகர மேயர் என்.ரவிராஜ் சம்பந்தப்பட்ட கச்சான் வியாபாரியான பெண்ணை இந்து விடுதிக்குள் அழைத்துப் பேச்சு நடத்தியதாகவும் -

அப்போது வெளியிலிருந்து இந்து விடுதியை நோக்கி வீசப்பட்ட பல கற்களில் சில மேயரிலும் பட்டதாகவும் -

எனினும் நிலைமையைச் சமாளித்து, சம்பந்தப்பட்ட பெண்மணியையும் சமரசம் செய்து அவர்களை மேயர் அனுப்பி வைத்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

எனினும் சற்றுநேரம் கழித்து கூட்டமாக வந்த மற்றொரு கும்பல் இந்து விடுதியின் சுவர்களை அடித்து நொறுக்கியதோடு உள்ளே புகுந்து அட்டகாசமும் புரிந்ததாகக் கூறப்படுகின்றது. இச்சம்பவங்களில் மாநகர சபை ஊழியர் ஒருவர் உட்பட இருவர் காயமுற்றனர்.

"ஏற்பட்ட தகராறு சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது. எனினும் தீய நோக்கம் கொண்ட குழு ஒன்று, பின்னணியிலிருந்து இயங்கும் தீய சக்திகளின் தூண்டுதலின் பேரில் பின்னர் இத்தகைய அநாகரிகமான செயல்களில் ஈடுபட்டுள்ளது.

"புனிதமான ஆலயச் சுற்றாடலில் பொலிஸாரை வரவைக்கும் - அழைத்து வரச் செய்யும் - எண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் இத்தீய சக்திகளின் பிழையான நோக்கங்களுக்குத் துணைபோகவேண்டாம் என நான் பொதுமக்களைக் கோருகின்றேன்.

"தற்போதைய நிலைமையைக் கருத்தில் கொண்டு இன்றிரவு ஆலயச் சுற்றாடலில் உள்ள தடைகள் இரவு ஏழு மணிக்குப் பதிலாக இரவு ஒன்பது மணிக்கே அகற்றப்படும்" - என்று தெரிவித்தார் மேயர் ரவிராஜ்.

---

# காப்புறுதிக் கட்டண அதிகரிப்பு துறைமுகத்தை முற்றாக முடக்கிவிடும்

## ஆசிய சிறுகப்பல்கள் சங்கத் தலைவர் தெரிவிப்பு

யுத்த அபாய காப்புறுதிக் கட்டணங்களின் திடீர் அதிகரிப்பு கொழும்புத் துறைமுகத்தின் செயற்பாடுகளை முற்றாக முடக்கிவிடும் என்று கப்பல் நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

இரண்டாவது வாரமாக கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரித்த நிற்காமல் செல்கின்றன. இந்த நிலை மேலும் தொடர்ந்தால் கொழும்புத் துறைமுகத்தின் வர்த்தகம் அடியோடு சரிந்து விடும் என்று ஆசிய சிறுகப்பல்கள் சங்கத்தின் தலைவர் ட்ரிட்ஸ்ரன் ஹோவிற தெரிவித்துள்ளார்.

600 கொள்கலன்களை ஏற்றி இறக்கும் ஒரு சிறிய ரகக் கப்பலுக்கு கொழும்புத் துறைமுகத்தில், ஒரு தடவை தரித்துச் செல்வதற்கு ஒரு லட்சத்து 50,000 டொலர்களும், பெரிய கப்பல்களுக்கு தலா 5லட்சம் டொலர்களும் யுத்த அபாயத்திற்கான அதிகரித்த காப்புறுதிக் கட்டணங்களைச் செலுத்தவேண்டும். இதனால் ஏற்படக்கூடிய இறுதி விளைவுகள் பேரழிவு தருவனவாக இருக்கும் என்று கொழும்புக்கு அடிக்கடி வந்து செல்லும் கப்பல்களின் நிறுவனப் பணிப்பாளர் பில் ஸ்மாட் தெரிவித்தார்.

எவர்கிறீன் கப்பல் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் -

நாம் மாதம் ஒன்றுக்கு 28 தடவைகள் கொழும்புக்கு விஜயம் செய்வதுண்டு. அவற்றை நான்கு தடவைகளாகக் குறைத்துவிட்டோம் என்றார். (ம)

### பதுங்குகுழியில் தீ விபத்து; ஆயுதங்கள் நாசம்

வவுனியா மகாகச்சைக்கொடிப் பகுதியில் உள்ள படையினரின் முன்னணிக் காவலரண் பகுதியில் உள்ள பதுங்குகுழி ஒன்றில் நேற்று ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக அதிலிருந்த சில துப்பாக்கிகளும் கிரனேட்டுக்களும் வெடித்துச் சிதறி நாசமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

# ராஸிக் குழு உறுப்பினர் ஒருவர் புலிகளின் தாக்குதலில் பலி

மட்டக்களப்பு,ஓக.19

மட்டக்களப்பு வாவிக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நேற்றுக்காலை ஊடுருவிய ராஸிக் குழுவினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ராஸிக குழுவைச் சேர்ந்த சார்ஜண்ட் ஒருவர் கொல்லப்பட்டார்.

அவரிடமிருந்த ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது -

வாவிக்கு அப்பால் புலிகளின் நடமாட்டம் காணப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காக இவர்கள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றதாகவும் -

பதுங்கியிருந்த விடுதலைப்புலிகள இவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் -

இந்தத் தாக்குதலில் தமது தரப்பில் ஒரு சார்ஜண்ட் உயிரிழந்ததாகவும் -

அவரிடமிருந்த ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றி விட்டதாகவும் -

ராஸிக்குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-6)

---


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 . 12 . 1927



உதிர்வு 30 . 08 . 2000

### திருமதி இராசநாயகம் மகேஸ்வரி

திதி : பிரதமை (பூர்வ பக்கம்) 19.08.2001

எம் குல விளக்கே!
இப் புவியில் நாம் உள்ளவரைக்கும்
எம் உள்ளங்களில் உங்கள் நினைவுகள்
என்றென்றும் அழியவே அழியாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பரராஜசேகரப்பிள்ளையாரைப் பணிகின்றோம்.

இணுவில் தெற்கு,
இணுவில்.
(C/17932)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பளைப் பிரதேச மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர் ஊழியர்களின் வைகாசி, ஆனி, ஆடி ஆகிய



மாதங்களுக்குரிய சம்பளத்தின்
ஒரு பகுதியை வழங்குவதற்கு
அனுமதி வழங்கியதற்காகவும்,
மிருசுவில் கரம்பகம் தோட்டத்தில்
தேங்காய் பறிப்பதற்கு படையினரிடம்
அனுமதி பெற்றுத்தந்தமைக்காகவும்

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு,
புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு
தமிழ்மொழி அமுலாக்கல்
இந்து கலாசார அமைச்சர் கௌரவ

### கே.என்.டக்ளஸ் தேவானந்தா

அவர்களையும்

இக்கொடுப்பனவுகளை உரிய வேளையில் வழங்கிய பரந்தன் இரசாயனக் கம்பனி லிமிட்டெட்டின் தலைவர்

### உயர்திரு. பொன்.தியாகராசா

அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பொறுப்பதிகாரி,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, பளைப் பிரதேசம்.

(C/17931)

# உணவகத்தில் தீப்பிடித்ததில் பிலிப்பைன்ஸில் 68 பேர் பலி!

மணிலா,ஓகஸ்ட்19

**பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவின் புற நகர்ப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தீ விபத்தில் 68 பேர் உயிரிழந்தனர்.**

6 மாடிக் கட்டடத்தில் அமைந்திருந்த உணவகத்தின் சமையலறைப் பகுதியில் முதலில் தீ உணரப்பட்டதாகவும் -

ஆனால் வேகமாகப் பரவிய தீ மற்றும் புகையால் கட்டடம் சூழப்பட்டதாகவும் கூறப்பட்டது.

உணவகத்தில் அதிகளவில் இருந்த சிறுவர்கள் புகையால் மூச்சுத்திணறி உயிரிழந்தனர். தீ ஏற்பட்டதற்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை.

நேற்று மாலைவரை உயிரிழந்த 68 பேரது சடலங்கள் மீட்கப்பட்டன.

ஆயினும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது. (ஓ)



பலஸ்தீனப் போராளிகளுக்கு ஆதரவு தெரிவிக்குமாறு ஈராக் மக்களிடம் அதிபர் சதாம் ஹூசைன் வேண்டுகோள் விடுத்ததையடுத்து கடந்த புதன்கிழமை ஈராக்கில் பலஸ்தீனர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஈராக்கியர்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டபோது எடுத்த படம்.

# இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் ஜெயலலிதாவின் எண்ணத்தில் மண்!

சென்னை,ஓக.19

தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினராகாமல், சட்டமன்றப் பதவிக்காலம் முழுவதும்



முதலமைச்சராகப் பதவி வகிக்கும் வாய்ப்புக்கு இந்திய உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பால் முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுககப்படாமல் 6 மாதகாலத்துக்கு அமைச்சராக நியமிக்கப்பட்ட ஒருவர் அந்தப் பேரவையின் பதவிக் காலத்தில் மீண்டும் அமைச்சராக நியமிக்கப்படுவதற்கு இந்திய உச்ச நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தடை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

ஒருவர் தொடர்ந்து 6 மாதகாலம் அமைச்சராக இருக்க அனுமதிக்கப்பட்ட கருணைக் காலம் முடிவடைவதற்குள், அவர் சட்டப்பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், அவரை மீண்டும் அமைச்சராக நியமிப்பது இந்திய அரசமைப்பை பாதிக்குமென்றும் -

பிரதிநிதித்துவ அரசு மற்றும் பொறுப்பான அரசு என்ற கோட்பாட்டையே அது குலைத்துவிடுமென்றும் -

இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கொலை செய்யப்பட்ட பஞ்சாப் முதலமைச்சர் தியான்சிங்கின் மகன் பேஸ் பிராகாஷ்சிங் பஞ்சாப் சட்டப் பேரவைக்குத் தேர்தெடுக்கப்படாமல் 6 மாதங்களுக்கு அமைச்சராக இருந்தபிறகு, மறுபடியும் சட்டப் பேரவை உறுப்பினராகமலேயே அமைச்சராக நியமிக்கப்பட்டது தொடர்பான வழக்கிலேயே இந்திய உச்ச நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்பு ஜெயலலிதாவுக்குப் பாதகமாக அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சட்டமன்ற உறுப்பினராக இல்லாத ஜெயலலிதா தற்போது முதலமைச்சராக உள்ளார். அவர் 6 மாத காலத்திற்குள், தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக வேண்டியது கட்டாயமாகும்.

ஆனால், கருணாநிதி கைது விவகாரம் உட்பட பல விடயங்களால் மக்கள் ஆதரவை இழந்து விட்ட ஜெயலலிதா தேர்தலில் ஜெயிப்பது இயலாத காரியம் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், 6 மாதகாலம் முடிவடைவதற்கு ஒரு நாள் முன்னதாக முதல்வர் பதவியை ராஜி னாமா செய்துவிட்டு மறுபடியும் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களால் அவர் முதல்வராக்கப்பட்டால் சட்டப்படி தடுக்கமுடியாதென்றும் -

இப்படியே 5 ஆண்டுகளை அவர் கடத்திவிட வாய்ப்பிருப்பதாகவும் - முன்னர் கூறப்பட்டது.

ஆனால் உச்ச நீதிமன்றத்தின் தற்போதைய தீர்ப்பு, அப்படிப்பட்ட வாய்ப்பை அடியோடு அகற்றிவிட்டது.

## 70 லட்சம் பவுன்ட்ஸ் பெறுமதியான டயானாவின் பொருள்களை திருடிய பணியாளர் மீது வழக்கு

லண்டன்,ஓக.19

காலஞ்சென்ற பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் இரவு உடை, அந்தரங்கக் கடிதங்கள் உட்பட அவருக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான பொருள்களைத் திருடியதாக டயானாவிடம் உதவியாளராகப் பணிபுரிந்த போல் பரல் (வயது43) என்பவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் இளவரசியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கென்ஸிங்டன் அரண்மனையில் பணியாற்றிய சமயத்தில், டயானாவுக்குச் சொந்தமான 342 பொருள்களை பரல் திருடியதாக பிரிட்டிஷ் பொலீஸார் வழக்குப பதிவு செய்துள்ளனர்.

இளவரசி டயானா இறக்கும்வரை பல ஆண்டுகளாக பரல் அவருக்கு அகப்பணியாளராகப் (பட்லர்) பணியாற்றினார். திருடப்பட்டதாகக் கூறப்படும பொருள்கள், டயானாவால் தனக்குப் பரிசாக வழங்கப்பட்டதாகப் பரல் கூறுகிறார்.

டயானாவிடம் பணியாற்ற முன்னர் எலிஸபெத் மகாராணியின் சேவகராக பரல் 12ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். இவர் திருடியதாகக் கூறப்படும் டயானாவின் பொருள்களின் மதிப்பு சுமார் 70 லட்சம் பவுண்ட்ஸ் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

# பத்திரிகையாளர் மீதான வழக்கை நேபாள அரசு விலக்க முடிவு!

காத்மண்டு,ஓக.19

நேபாளத்தில் "காந்திப்பூர்" நாளேட்டின் ஆசிரியர் சுவராஜ்ஜிவ் தேவ் உள்ளிட்ட 4 பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றவியல் வழக்குகளை விலக்கிக்கொள்ள நேபாள அரசு முடிவு செய்துள்ளது.

இந்தப் பத்திரிகையாளர்கள் மீதான வழக்குகளை விலக்கிக் கொள்ளுமாறு, தேசிய மற்றும் சர்வதேச அளவில் வற்புறுத்தப்பட்டதால் இந்த முடிவை எடுத்ததாக நேபாளத் தகவல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

நேபாள அரச குடும்பப் படுகொலைகளைத் தொடர்ந்து தலைமறைவு மாவோயிஸ தீவிரவாதிகளின் தலைவர் எழுதிய கட்டுரையொன்றை வெளியிட்ட காரணத்தினாலேயே ஜிவ்தேவ் மற்றும் அவரது அலுவலக சகாக்கள் கைது செயயப்பட்டனர். (ஓ)



பிலிப்பைன்ஸில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையால் தலைநகர் மணிலாவில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வீதிகளில் பெருக்கெடுத்தோடும் வெள்ளத்தின் ஊடாக மக்கள் பணிகளுக்குச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# அமெரிக்காவின் 10 மாநிலங்களில் காட்டுத்தீயினால் பெரும் பாதிப்பு!

வாஷிங்ரன்,ஓக.19

அமெரிக்காவின் 10 மாநிலங்களில் பரவிவரும் காட்டுத் தீயை அணைப்பதில் நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனனர்.

வாஷிங்ரன், கலிபோர்னியா ஆகிய மாநிலக் காட்டுப் பிரதேசங்கள் இந்தக் காட்டுத்தீயால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதுவரை சுமார் 50 லட்சம் ஏகக்களுக்கும் அதிகமான பரப்பளவில் காட்டுத்தீ பரவியுள்ளது.

காடுகளில் வரட்சியாலும், அதிகரித்துவரும் கடும் வெப்பநிலையாலும் காட்டுத்தீ வேகமாகத் தொடர்ந்து பரவிவருகிறது.

காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால், தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் கடும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

தீ பரவியுள்ள காடுகளை அடுத்துள்ள குடியிருப்புப் பகுதிகளில், அமெரிக்காவில் இதுவரை நிலவியிராத அளவில் 105 பாகை பரன்ஹீட் வெப்பநிலை உணரப்பட்டுள்ளது.

விடுமுறையைக் கழிக்க, காட்டுப் பகுதிகளில் முகாமிட்டிருந்தவர்கள் வேகமாகப் பரவிவரும் காட்டுத்தீயால் சூழப்படும் ஆபத்து உள்ளதால், அவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஹெலிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ஓ-4)

# இந்தியாவில் அடுத்தடுத்து இரண்டு ரயில் விபத்துகள்

பாட்னா,ஓக.19

இந்தியாவின் பீஹரர் மாநிலத்தில் பயணிகள் ரயிலுடன் சரக்கு ரயில் மோதியதில் 10 பேர் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில், காயமடைந்த பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக இந்திய ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை - மகாராஷ்டிரா மாநிலத்தில் தண்டவாளத்தைக் கடக்க முற்பட்ட சமயத்தில் ரயிலினால் மோதுண்டு 5 சிறுவர் உட்பட 15 பேர் கொல்லப்பட்டனர்.

பயணம் செய்த ரயிலை அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து தமதூரில் நிறுத்தி, இறங்கிய அவர்கள் பக்கத்திலிருந்த தண்டவாளத்தை கடக்க முற்பட்ட போதே, மற்றொரு ரயிலால் மோதுண்டு உயிரிழந்தனர்.

இறந்தவர்கள் ரயிலை நிறுத்திய, அந்த ஊரில் ரயில் நிலையம் இல்லாததால் அவர்கள் அபாயச் சங்கிலியைப் பிடித்திழுத்து ரயிலை நிறுத்தியதாகக் கூறப்படுகிறது. (ஓ-6)

## காபனீரொட்சைட் தொடர்பான ஆய்வு

காபனீரொட்சைட் வளி மண்டலத்தில் கலக்கும் அளவைக் குறைப்பதால், லட்சக்கணக்கானோரை மரணத்திலிருந்தும், நோய்களில் இருந்தும் பாதுகாக்க முடியுமென்று ஆய்வு ஒன்று கூறியுள்ளது.

அமெரிக்க விஞ்ஞான சஞ்சிகையொன்றில் வெளியிடப்பட்ட இந்த ஆய்வு 5 ஆராய்ச்சியாளர்களால் சர்வதேச ரீதியில் நடத்தப்பட்டதாகும்.

காபனீரொட்சைட் வெளியேற்றத்தைக் குறைக்கும் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தவேண்டு மென்றும் - இதன் மூலம் அமெரிக்காவில் உள்ள 4 பெரிய நகரங்களில் பல விதமான பாதிப்புகளைத் தவிர்க்க முடியுமென்றும் - ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

## ஆண்டிறுதியில் புஷ் - வாஜ்பாய் சந்திப்பு

நியூயோர்க்,ஓக.19

நியூயோர்க்கில் இடம்பெற உள்ள ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தின் போது அமெரிக்க அதிபர் புஷ்ஷும், இந்தியப் பிரதமர் வாஜ்பாயும், சந்தித்து பேச்சு நடந்த உள்ளனர்.

இந்த ஆண்டின் இறுதியில் நடைபெற உள்ள ஐ.நா.கூட்டத்தில் பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பும் கலந்துகொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.(ஓ)

## மத்திய அரசின் கோரிக்கைக்கு ஜெயலலிதா மறுப்பு

சென்னைப் பொலீஸ் ஆணையாளர் முத்துகருப்பன் உட்பட கருணாநிதி கைது விவகாரத்தில் சம்பந்தப்பட்ட 3 தமிழகப் பொலீஸ் அதிகாரிகளையும், மத்திய அரசுப் பணிக்காக பணியிலிருந்து விடுவிக்கும் எண்ணம் தமிழக அரசுக்குக் கிடையாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்றுத் தெரிவித்தார்.(ஓ)

# இந்தியாவுக்குச் சாதகமாக அமெரிக்கா செயற்படுகிறது

## பாகிஸ்தான் குற்றச்சாட்டு

இஸ்லாமபாத்,ஓக.19

இந்தியாவுக்குச் சார்பாக ஒரு தலைப்பட்சமாக அமெரிக்கா நடந்து கொள்வதாக பாகிஸ்தானிய வெளியுற அமைச்சர் இனாமுல் ஹக் தெரிவித்தார்.

இந்தியா பலமுறை வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்கியுள்ள போதிலும், சீனாவிடமிருந்து பாகிஸ்தான் ஆயுதங்கள் வாங்குவது குறித்து அமெரிக்கா கண்டனம் தெரிவித்திருப்பது முறையற்ற செயல் என்று அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானின் இராணுவ ஆயுத பலம் வலுவடைய சீனத் தொழில் நுட்பத்தைப் பெற்றுக் கொண்டதாக, வெளிவந்த செய்திகளை இனாமுல் ஹக் மறுத்தார்.

ஆனால் சீனாவுடனான உறவுகளை பாகிஸ்தான் எப்போதும் பாதுகாக்கும் என்று அவர் வலியுறுத்தினார்.

அமெரிக்க அதிபர் புஷ் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ள இருக்கும் நிலையில் பாகிஸ்தானுக்கு சீனா இராணுவ ரீதியிலான தொழில் நுட்பங்களை வழங்கும் விடயம், அமெரிக்க - சீன உறவுகளைச் சிக்கலாக்கியுள்ளது. (ஓ-4)

## மரணதண்டனை

கோசிமின்சிற்றி,ஓக.19

வியட்னாமில் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தியதாகக் குற்றம் நிரூபிக்கப்பட்ட 12 பேரைச் சுட்டுக்கொல்லுமாறு நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது. (ஓ)

# தீவகவலயத்தில் இருந்து 111 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

தமிழ்மொழி மூல தகுதிகாண் ஆசிரியர்களை நியமனம் செய்யும் திட்டத்தின் கீழ் திவகக் கல்வி வலயத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சைக்கு 111 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நேர்முகப்பரீட்சை தொடர்பான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் பரீட்சார்த்திகள் உரியதினத்தில் வேலணை — வங்களாவடிச் சந்தியில் உள்ள வலயக் கல்வி அலுவலகத்துக்குச் சமுகமளிக்கவேண்டுமெனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

செபமாலை மரியசாந்தினி (11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு), பொனவென்தஸ் டெனிற்றா டொமினிற்றா (10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு), சண்முகம் மலர் (5 ஆம் வட்டாரம், நெடுந்திவு), சிங்கராயர் விமலராஜினி (10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு), கதிரவேலு கவிதா (15 ஆம் வட்டாரம் நெடுந்தீவு).

தம்பிராஜா சுகந்தினி (முதலாம் வட்டாரம், நெடுந்தீவு), கிருஷ்ணன் அமிர்தவேணி (அச்சுவேலி தெற்கு), எஸ். பாலசுப்பிரமணியம் (முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்), தியாகராசா சற்குணம் (13 ஆம் வட்டாரம், நெடுந்தீவு), கிறிஸ்தோபர் கமால் தியாககுமார் (8 ஆம் வட்டாரம், நெடுந்தீவு), கோபாலசிங்கம் புஸ்பலதா (2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு).

நவரட்ணம் பிரபாகினி (கைதடி வடக்கு), பாக்கியசெபநாயகிறோபேட் சிலுவைராஜா (10 ஆம் வட்டாரம், நெடுந்திவு), மேரிகாஞ்சனா பெர்னாந்து (11 ஆம் வட்டாரம், நெடுந்திவு), ரி. தனலட்சுமி (13 ஆம் வட்டாரம், நெடுந்திவு).

அம்பலவாணர் சிவாந்தினி (காரைநகர்), வல்லிபுரம் தர்சினி (களபூமி, காரைநகர்), கணேசன் சுஜீவன் (முதலாம் வட்டாரம் அனலைதீவு), பொன்னம்பலம் யசோதா (வவுனியா), இராமநாதன் கீத்தா (பயிரிக்கூடல், காரைநகர்), ராஜாஜி ரவிராஜ் (நுணாவில் மேற்கு).

ஐயம்பிள்ளை சிவகலா (காரைநகர்), வல்லிபுரம் தியாக சொரூபி (களபூமி, காரைநகர்), நாகவதனா சச்சிதானந்தன் (மணற்காடு, காரைநகர்), ராஜாஜி ரவிராஜ் (களபூமி, கரரைநகர்).

சிவஞானபிள்ளை பரதன் (ஊர்காவற்றுறை), சதாசிவம் சுபாசினி (களபூமி, காரைநகர்), சுப்பிரமணியம் கவிதா (களபூமி, காரைநகர்), தியாகராஜா தியாகேஸ்வரி (கருங்காலி, காரைநகர்), தியாகலிங்கம். கருணைதேவன் (களபூமி காரைநகர்).

யோகேஸ்வரன் திருமகள் (களபூமி காரைநகர்), தவச்செல்வம் முகுந்தன் (புளியங்கூடல் வடக்கு), பலராமன் அற்புதமலர் (காரைநகர்), கிருபானந்தம் அருந்ததி (விளானை, காரைநகர்), கோபாலபிள்ளை கலையரசி (நாரந்தனை வடக்கு).

நடராசா பாரதி (காரைநகர்), ஜெயமலர் தியாகலிங்கம் (களபூமி, காரைநகர்), நடராஜா நாகேஸ்வரி (7 ஆம் வட்டாரம், அனலைதீவு), மகேஸ்வரன் சிவசாம்பவி (காரைநகர்), பாலசிங்கம் திருலோகேஸ்வரன் (களபூமி, காரைநகர்).

லினஸ் ரட்ணம் ஜவன் மெறிற்ரா (கரம்பன்தெற்கு), பாலசுந்தரம் சோமசுந்தரம் (காரைநகர்), துரைராஜா தர்சினி (நாரந்தனை), திருஞானம் சுமதி (கரம்பன் கிழக்கு), ரி. ஞானேஸ்வரி (கோவளம், காரைநகர்), மரியசிலன் டல்சி (10 ஆம் வட்டாரம், நெடுந்திவு).

கந்தசாமி பேரின்பகுமார் (காரைநகர்), தேவராசா சத்தியானந்தன் (பெரிய மணல், காரைநகர்), சதாசிவம் வைதேகி (சுருவில் ஊர்காவற்றுறை), கனகசபை சத்தியரூபி (அலன் வீதி, காரைநகர்), ஸ்ரீபன் சோபனா பிறேமினி (நாரந்தனை மேற்கு), சுமதி அருமைத்துரை (வெடியரசன் வீதி, காரைநகர்).

நவரட்ணம் லாவினா (பருத்தியடைப்பு, காரைநகர்), செல்லையா கதிர்காமநாதன் (கருங்காலி, காரைநகர்), தியாகராஜா பாக்கியலக்ஷ்மி (களபூமி, காரைநகர்), ஜேசுதாஸன் சுமித்ராவதி (கரம்பன் கிழக்கு), ஏகாம்பரம் அமிர்தினி (புது வீதி காரைநகர்).

குலசிங்கம் செல்வகுமரன் (தங்கோடை, காரைநகர்), குலசேகரம் பத்மலீலா (களபூமி, காரைநகர்), நற்குணராஜா (றொபேட்சன் சிறீகாந் (நாரந்தனை வடக்கு), பொன்னம்பலம் ரவீந்திரன் (கந்தசாமி கோவில் வீதி, வவுனியா), செல்வதேவி அருளையா (வைரவப் புளியங்குளம், வவுனியா).

வலன்ரைன் வேர்ஜினி அஜந்தா (பாலாவி வீதி, கரம்பொன்). கே. உமாசுதன் (பலாலி வீதி யாழ்), எழிலினி ரகுநாதன் (வேலணை கிழக்கு), மயில்வாகனம் குகன் (வேலணை கிழக்கு), கந்தசாமி மதியழகன் (வேலணை கிழக்கு).

எஸ். சதானந்தன் (வேலணை மேற்கு), சிவலிங்கம் ஜசீதரன் (வேலணை கிழக்கு), குணராசா பிரியா (நீராவியடி, யாழ்.) சொக்கலிங்கம் அருள்நாதன் (சரவணை மேற்கு), சண்முகநாதன் சிவாஜினி (5 ஏ. வட்டாரம் நயினாதீவு).

சிவராஜா ரூபகௌரி (6 ஆம் வட்டாரம், மண்டதீவு), தர்மலிங்கம் சுகந்தி (3 ஆம் வட்டாரம், புங்குடுதீவு), விசுவநாதன் விமலாம்பிகை (5. ஏ வட்டாரம், நயினாதீவு), சிவராஜா ஆனந்தி (வேலணை கிழக்கு), மதனகௌரி சிவராஜா (6 ஆம் வட்டாரம், மண்டதீவு).

இரத்தினம் சிவரஞ்சன் [வவுனியா], பேரம்பலம் தவேஸ்வரன் [5 ஆம் வட்டாரம், நயினாதீவு], நமசிவாயம் பிருந்தா [4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு], பேர்னாட் ஜோன்ஸ் கமலராஜ் [4 ஆம் வட்டாரம், மண்டதீவு]. நடராஜா மயூரன் [6 ஆம் வட்டாரம் நயினாதீவு].

தில்லைநாதன் யோகேஸ்வரி [11 ஆம் வட்டாரம், புங்குடுதீவு], சோமசுந்தரம் தனலட்சுமி [5 ஆம் வட்டாரம் நயினாதீவு]. விசுவலிங்கம் முரளிதாஸ் [வேலணை மேற்கு], வனஜா மார்க்கண்டு [வேலணை கிழக்கு], செல்வராசன் கோபிகா [வேலணை மேற்கு].

நல்லையா சதானந்தன் [7 ஆம் வட்டாரம், மண்டதீவு], விஜயலட்சுமி ராஜதுரை [வேலணை கிழக்கு], அபரணா கார்த்திகேசு [4 ஆம் வட்டாரம், நயினாதீவு], சரவணபவன் மோகனபவன் [6 ஆம் வட்டாரம் மண்டதீவு], தர்மசகாயம் பிள்ளை புனிதச்செல்வி [3 ஆம் வட்டாரம் மண்டதீவு].

தியாகராஜா ஜாமினி (சுதுமலை வடக்கு), துரைராஜா ராதா (திருநெல்வேலி வடக்கு), ஜெயகுணதிலகம் ஜெயசாந்தி (மண்டதீவு), தேவநாயகம் பிரேமானந்த (வேலணை கிழக்கு), சபாரட்ணம் யசோதரன் (வேலணை கிழக்கு), குகனேசன் தர்சினி (2 ஆம் வட்டாரம், புங்குடுதிவு).

செல்வராஜா தர்சினி (சரவணை மேற்கு), நீலாம்பிகை ஜெகதீசன் (வேலணை), பரமலிங்கம் குகனேஸ்வரன் (கொக்குவில்), விநாயகமூர்த்தி திருவருட்செல்வி (8 ஆம் வட்டாரம், மண்டதீவு), கனகசசிதா (5 ஆம் வட்டாரம், நயினாதீவு), அருளானந்தம் தயாளினி (3 ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு).

கிருஷ்ணசாமி கிருபானந்தி (5 ஆம் வட்டாரம், நயினாதீவு), செல்லத்துரை பாமிலாதேவி (வவுனியா), மகாதேவா துளசிமலர் (8 ஆம் வட்டாரம், நயினாதீவு), சோமசுந்தரம் சுஜாதா (5 ஆம் வட்டாரம், நயினாதீவு), ஆர். தற்பரன் (வேலணை மேற்கு), பி. பிரியதர்சினி (4 ஆம் வட்டாரம், நயினாதீவு), ஆர். சுகிதா (வேலணை மேற்கு).

(ஐ-7-9)

# ‘முதல்நன்மை’ என்னும் முக்கிய கடன்

கத்தோலிக்கர்களின் வாழ்க்கையில் முக்கிய அனுஷ்டானமாக இடம்பெறும் ‘முதல்நன்மை’ பற்றிய கட்டுரையின் ஒரு பகுதி 29-07-2001 ஆம் திகதிய உதயனில் ஞாயிறு நற்பிரசாதம் பகுதியில் இடம் பெற்றிருந்தது. அதன் எஞ்சிய இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

### திருச்சபை என்பது என்ன?

### ‘குழந்தை அனுபவம்’

ஒரு குடும்பத்தைப் பற்றியும், குடும்பத்தில் நடைபெறும் பல்வேறு செயற்பாடுகளைப் பற்றியும், சிறு சிறு கதைகளின் மூலமாகவோ, வரைபடங்களின் மூலமாகவோ ஆசிரியர் விளக்கலாம். தேர்ந்தெடுக்கப்படுகின்ற வரைபடங்கள் குழந்தை தன்னுடைய வாழ்க்கையில் அன்றாடம் பார்க்கக்கூடியதாயும் அனுபவிக்கக்கூடியதாயும் இருப்பது அவசியம். இதன் மூலம் ஒரு குடும்பத்தைப் பற்றிய கருத்தை ஒரு குழந்தை பெற்றுக்கொள்கிறது.

### செயற்பாடு

ஒரு குடும்பத்தின் அடிப்படையாக — ஆணிவேராக — விளங்குவது அன்பு! இந்த அன்பு செயலாக்கம் பெறுவது நாம் பிறருக்குப் புரிகின்ற பணியில்தான். குழந்தைகள், தங்கள் குடும்பத்தில் எவ்வாறெல்லாம் தங்களுடைய பெற்றோர்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் உதவியாகப் பணிபுரிய முடியும் என்று அவர்களிடையே கேட்டு, அக்காரியங்களை அவர்களே செய்யச் சொல்லுதல்.

### கொண்டாட்டம்

வீடுகளில் கொண்டாடப்படும் திருமணவிழா, பிறந்தநாள் விழா முதலியன பற்றியும், ஊரில் கொண்டாடப்படும் கோவில் திருவிழா பங்குவிழா பற்றியும், அவற்றின் தன்மைகள் பற்றியும் ஆசிரியர் விளக்கிக் கூறலாம். முடியுமானால் வகுப்பு அளவில் ஒரு கொண்டாட்டத்திற்கும் ஏற்பாடு செய்யலாம். அந்நாட்களில் வரும் திருச்சபையின் ஒரு திருவிழாவை மையமாக வைத்து, குழந்தைகள் அனைவரையும் ஒரு குடும்பமாக வரவழைத்து கொண்டாட்டத்தை நடத்தலாம். விளையாட்டுகள், கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றில் குழந்தைகள் தங்களுடைய பங்களிப்பை முழுமையாக அளிக்க அழைக்கப்பட வேண்டும்.

1. வீட்டிலும், பங்கிலும் நடைபெறும் விழாக்களிலும் கொண்டாட்டங்களிலும் முழுமையாகப் பங்கெடுக்க உதவுதல்.

2. பலிபீடத்தில் இயேசுவைப் பகிர்ந்து கொள்ளும் நாம், ஏழைகளோடு நம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறோம் என்கிறார் பேராயர் கெல்டர்காமரா (Helder Camara). குழந்தைகள் தங்கள் வாழ்வில் எவ்வாறெல்லாம் பகிர்ந்து கொள்ள முடியும் என்று விளக்கி, அவர்களுக்குள் பகிர்வு மனப்பான்மையைத் தூண்டுதல்.

### தியாகப்பலி

பெற்றோர்கள், பிள்ளைகள் நலனுக்காகப் பல தியாகங்கள் செய்வது குடும்பங்

**ஞாயிறு நற்பிரசாதம்**

களில் நாம் அன்றாடம் காணும் காட்சி. அவர்கள் செய்யும் பல்வேறு தியாகங்கள் எடுத்துரைக்கப்படலாம். மேலும் தியாகம் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் பின்னிப் பிணைந்த ஒன்று. எங்கு அன்பு உள்ளதோ அங்கு தியாகம் இருக்கிறது. ஒரு சிறு கதை. ஒரு சிறுமி அறுவைச் சிகிச்சைக்காக மருத்துமனையில் சேர்க்கப்பட்டாள். அறுவை சிகிச்சைக்குத்தேவையான இரத்தத்தைத் தர பலரும் முன்வந்தனர்.

ஆனால் யாருடைய இரத்த வகையும் அந்தச் சிறுமிக்கு ஒத்துவரவில்லை. அவளுடைய தம்பியின் இரத்த வகை மட்டுமே ஒத்துப்போகக் கூடியதாக இருந்தது. அவனிடம் “உன் அக்காவிற்கு இரத்தம் தருகிறாயா?” என்று கேட்கிறார்கள், அவன் ஒரு நிமிடம் யோசித்துவிட்டு “சரி” என்று கூறினான். மறுநாள் படுக்கையில் கிடத்தி, அவன் உடம்பில் இருந்து இரத்தம் எடுத்தார்கள். இரத்தம் எடுத்த பின்பும் அவன் கண்களை மூடியிருந்தான். அவன் கண்களைத் திறந்து, ஆச்சரியத்துடன், “நான் இன்னும் சாகவில்லையா?” என்று கேட்டான். இதைப்போன்ற சிறு சிறுகதைகளும், தியாகத்தைச் சுட்டிக் காட்டும் நிகழ்வுகளும் சொல்லப்படலாம்.

நாம் செய்கின்ற சிறு தியாகங்கள், பிறருடைய வாழ்க்கைக்கு மகிழ்ச்சியையும், நிறைவையும் கொண்டு வருகின்றன. என்னென்ன தியாகங்கள் செய்யச் சிறுவர் சிறுமியர் தயாராக இருக்கிறார்கள் என்பதை அவர்களிடமிருந்தே கேட்டு, அவர்களையே அவற்றைச் செய்யச் சொல்லலாம்.

### நற்கருணையில் உணவாக வருபவர் இயேசுவே

குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள், வெளிநாடுகளுக்குச் சென்ற பின்பு அவர்களுடைய நினைவாக அவர்கள் பயன்படுத்திய பொருள்களையோ அல்லது அவர்களுடைய புகைப்படத்தையோ வைத்திருப்பது அன்றாடம் நம் குடும்பங்களில் காணப்படும் ஒரு நிகழ்வு. அப் பொருள்களையோ, புகைப்படத்தையோ பார்க்கும்போது நம் உறவினர்களின் நினைவு நம்மை ஆட்கொள்கிறது.

### அனுபவத்திலிருந்து கோட்பாட்டுக்கு

நமது வீட்டில் இருக்கின்ற உறவினர்களின் புகைப்படத்தைப் போன்று நற்கருணையும் ஒரு நினைவுச் சின்னம் தான் என்றாலும் அதற்கும் ஒருபடி மேலானது. “இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்று கூறிய இறைவன் “இதோ உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்” என்று கூறி, நற்கருணையில் உண்மையிலேயே பிரசன்னமாயிருக்கிறார்.

அன்று எம்மாவு சீடர்கள், அப்பத்தைப் பகிரும்போது இயேசுவைக் கண்டுகொள்கிறார்கள். (காண்க: லூக் 24:13-35) நாமும் நற்கருணையை உட்கொள்ளும்போது இயேசுவை உட்கொள்கிறோம் என்பதை உணர வேண்டும். தொடர்புடைய விவிலியப்பகுதி: மத். 28:20 எந்நாளும் உங்களுடன் இருக்கிறேன். 1 கொரி 10:16,17 அப்பத்தைப் பிட்டு உண்ணும்போது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்கிறோம்.

உலகத்தை ஆண்டு வழிநடத்திவரும் இயேசுகிறிஸ்து உன் உள்ளத்தில் வரும்போது அவரை வரவேற்க உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருக்கவும், நற்கருணையைப் பெறும்போது பக்தியுடனும், மரியாதையுடனும் நடந்து கொள்ளவும் சொல்லித்தரப்படவேண்டும். ★

(நன்றி: பாதுகாவலன்)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்கள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஓக. 19

தற்போது நடைபெற்று வரும் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய இரண்டு தினங்களும் நடைபெற்ற பாடங்களின் விடைத்தாள்கள் நேற்று விமானப் படையினரின் விமானத்தில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக யாழ். கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் வைத்து விமானப் படை அதிகாரிகள் விடைத்தாள் பொதிகளைச்சோதனையிட்ட பின்னர் அவை கல்வி வலயத்தின்வாகனத்தில் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டு விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமான மேற்படி பரீட்சையின் விடைத்தாள்களில் கடந்த புதன்கிழமை வரையான விடைத்தாள்களும், ஐந்தாம் தரத்துக்கான புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் கடந்த வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஓ–10)

உதயன்

## விமானக் குண்டுவீச்சு விபரீதம்

தமிழ் மக்கள் மீதான கண்மூடித் தனமான குண்டுவீச்சுக்களை நிறுத்தி, பெறுமதி மிக்க உயிர்களை அழித் தொழிக்கும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, இனப்பிரச்சினைக்கு நீதி யான அரசியல் தீர்வினைக் காண் பதற்கான முயற்சிகளைத் துரிதப்ப டுத்த வேண்டும் என்று யாழ்.பல்கலைக ழக முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியம் கோரியிருப்பது கவனத்தில் எடுக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

ஒரு நாட்டில் அகால மரணமடை யும் ஒவ்வொரு பிரஜை தொடர்பாக வும் தகுதிவாய்ந்த நீதிவான் அல்லது அதிகாரி முன்னிலையில் கட்டாயமாக மரணவிசாரணை மேற்கொள்ளப்பட்டு முடிவு தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது மனித உரிமைகளைப் பேணும் பண்பில் எழுந்த பொதுச் சட்டமாகும். இது உலகளாவிய ரீதியில் கடைப் பிடிக்கப்பட்டுவரும் நியதியும் கூட.

ஆனால் 1985 ஆம் ஆண்டு தொடக் கம் இன்றுவரை - கடந்த 15 ஆண்டு களுக்கு மேலாக - இந்த நாட்டு மக் களின் மீது இந்த நாட்டு அரசின் விமானப்படை குண்டுவீசிக் கொல் லும் சம்பவங்களுக்கு - கொல்லப்பட்ட பொது மக்களுக்கு - இந்த சர்வதேச சட்ட நியதிகளுக்கும் மரபுகளுக்கும் அமைவாக மரண விசாரணைகள் நடத்தப்படுவதேயில்லை.

எனவே இலங்கை விமானப்படை யின் விமானிகளுக்கும் அவர்களை வழிநடத்தும் படை அதிகாரிகளுக் கும் எந்தவொரு தமிழன் மீதும் குண்டு வீசித் தாக்கி அழிப்பதற்கான பூரண அதிகாரமும் உரிமமும் பகிரங்கமாகவே வழங்கப்பட்டுள்ளது என்பதைச் சுட் டிக்காட்டி அந்தக் கேவலமான உண் மையை முல்லைத்தீவு மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் தெளி வாக வெளிப்படுத்தியிருக்கின்றது.

1995 ஆம் ஆண்டு நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் அதன் சுற் றாடலிலும் தஞ்சம் புகுந்திருந்த மக்களில் சுமார் 160இற்கும் மேற்பட் டோரை - இதே ஜனாதிபதியின் கட் டுப்பாட்டின் கீழ் இருந்த - விமானப் படையினர் குண்டுவீசி அழித்துக் கொன்றபோது கூட, புலிகளே படு கொலை செய்யப்பட்டதாகவும், பொது மக்கள் கொல்லப்படவேயில்லை என் றுமே சித்திரிக்கப்பட முயற்சிகள் எடுக் கப்பட்டன.

இராணுவத்தினரின் 'முன்னேற்றப் பாய்ச்சலுக்கு' அஞ்சி தமது இடங்களில் இருந்து உயிரைப் பிடித்துக்கொண்டு தப்பியோடிவந்து, களைப்பு மிகுதி யால் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தி லும் அதன் சுற்றாடலிலும் இளைப்பா றத் தங்கியிருந்ததைத் தவிர, வேறு எந்தத் தவறையும் இந்த அப்பாவி கள் அப்போது செய்யவில்லை.

அப்பாவிகள் தஞ்சம் புகும் தேவா லயங்கள், கோயில்கள் மீது நடத்தப் பட்ட விமானக்குண்டுவீச்சுத் தாக்கு தல்கள் இங்கு மிகமிக அதிகம். இவ் வாறு அப்பாவி மனித உயிர்களோடு - கோலிக் குண்டு அடித்து விளையா டும் சிறுவர் விளையாட்டுப்போல - விளையாடுவதற்கு அதிகாரம் அளிக் கும் சட்ட விதிகளை அவசரகாலச் சட்டத்துக்குக் கீழ் ஸ்ரீலங்கா அரசு பிறப்பித்து இதுவரை 'திருவிளையா டல்' புரிந்து வந்தது.

இப்போது அது காலாவதியாகி விட்டது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட விசேட அதி காரங்களைப் பயன்படுத்தி மோதல் களில் கொல்லப்பட்டவர்களின் சட லங்கள் எனத் தெரிவித்து, சடலங் களைத் தம் விருப்பப்படி அடக்கம் செய்யும் அதிகாரம் இப்போது படை யினருக்கு - பொலீஸாருக்கு - இல்லா மற்போய்விட்டது.

எனவே அப்பாவிகளின் எந்த அகால மரணத்துக்கும் மரணவிசா ரணை நடத்தப்பட வேண்டும். என் றாலும் கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுக்களில் அப்பாவிகள் கொல்லப்படுவதும், கேள்வி நியா மின்றி அந்தப் படுகொலைகள் கவ னிப்பாரற்று விடப்படுவதும் தமிழர் களுக்கு எதிரான இன அடக்குமுறை யின் மற்றொரு வடிவமாகத் தொடர் கின்றன.

இன அழிப்பு ரீதியான இத்தகைய நடவடிக்கைகள் சிங்களப் பேரினவா தத்திலிருந்து விலகிச் செல்லும்படி தமிழர்களைத் தூண்டி வலியுறுத்தும் விவகாரங்கள் என்பதை பேரினவாத அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

இத்தகைய - வகைதொகை யின்றி மக்களைக் கொல்லும் - கண் மூடித்தனமான - விமானக் குண்டுவீச்சு, புலிகள் எச்சரித்ததுபோல விபரீத விளைவுகளைத் தரலாம் என்பதையும அரசு சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

# பொன்னாலை பெருமாள் ஆலயத்தில் குருவாயூரப்பன் சிலை பிரதிஷ்டை

வலி.தென்மேற்கு,ஓக.19

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் குருவாயூரப் பன் (ஸ்ரீகிருஷ்ணன்) சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

இச்சிலை இந்தியாவின் மாமல்ல புரத்தில் இருந்து இங்கு எடுத்துவரப் பட்டுள்ளது.

புதிய சிலைக்கு எண்ணைக்காப்பு சாத்தும் வைபவம் நாளை திங்கட் கிழமை நண்பகல் 12 மணி முதல் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணி வரை நடைபெற வுள்ளது.

இதேவேளை -

இவ்வாலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 28ஆம் திகதி சப்பறத திருவிழாவும், அடுத்தமாதம் 2ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 5ஆம் திகதி அனந்தசயனத் திருவிழாவும், 8ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 9ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (ஐ-185-9)

## லயன்ஸ் கழக கருத்தரங்கு

வலி.தெற்கு,ஓக.19

லயன்ஸ் கழகங்களின் 9 ஆம் 10 ஆம் பிராந்தியங்களில் உள்ள கழக உறுப்பினர்கள் பங்குகொள் ளும் கருத்தரங்கு இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை ஆனைப் பந்தி உயர்கல்வி நிலைய மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

லயன் ஏ.தேவராசா, லயன் ஜே.முத்துக்குமாரசாமி, லயன் ஏ.நல்ல தம்பி ஆகிய வலயத் தலைவர்களின மேற்பார்வையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் லயன்ஸ் கழகத் தலைவர்கள் செயலாளர்கள் அங்கத்து வத்துக்குப் பொறுப்பான பணிப்பா ளர், முதலாவது உப தலைவர்கள் போன்றோர் பங்குபற்றவுள்ளனர். யாழ் மாவட்டத்தில் உள்ள சிரேஷ்ட லயன்ஸ் கழகப் பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவார்கள்.

## கும்பாபிஷேகம்

சண்டிலிப்பாய்,ஓக.19

மாதகல் - நுணசை சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா பஞ்ச குண்ட மகா கும்பாபிஷேகம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. (ஐ-135)

# நாட்டு நடப்பு

தேரேறி திருமுருகன் திருவுலா வருவதை
திரண்டடியார் காணவந்தார்
சீராக நான் இன்று திருவுலா வரவுள்ளேன்
சீரடியார் குழப்ப வேண்டாம்
ஆராத காதலுடன் அறுமுகன் எண்ணியதை
அடியோடு ஒதுக்கிவிட்டார்
தீராத கோபத்தில் செவ்வேள் முருகன் அவன்
திருத்தேரைத் தடுத்து வைக்க
அரோகரா என அலறி அழுகுரல் ஓங்கவே
அத்தேரை நகர வைத்தான்.

*- விகடகவி.*

## கனடா லியோ கழகம் அன்பளிப்பு

சண்டிலிப்பாய்,ஓக.19

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழ கத்திற்கு கனடா நாட்டில் உள்ள ஒன்ரேரியோ லியோகழகம் ஒரு தொகை மூக்குக் கண்ணாடிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இக்கழகத்தினால் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாம்களில் கண் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடி பெறுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட வறுமை நிலையில் உள்ள கண்பார்வை குறைந்தவர்க ளுக்கு இந்த மூக்குக் கண்ணாடி கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ் வொரு புதன்கிழமையிலும் பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரை மானிப்பாயிலுள்ள கழக அலுவல கத்தில் இவை வழங்கப்பட்டு வருவ தாக 'கண்பார்வைக்கு முதலிடம்' என்ற கழகச் செயல் திட்டத் தலை வர் செ.கேசவராஜன் தெரிவித்தார். (ஐ-135)

# அடிப்படைப் பலவீனம் களையப்படுமா?

தமிழ்பேசும் மக்களுக்கும் அவர்தம் தலைவர்களுக்கும் இதுவரை பல்வேறு சந்தர்ப்பங்களில் - பல்வேறு வழிகளில் - வலியுறுத்திச் சொன்ன ஒன்றை -


அதன் இன்றியமையாமையையும் அவசரத்தையும் கருதி -

மீண்டும் 'நெருட்ட' விரும்புகிறோம்!

இலங்கை வரலாற்றிலே, தமிழ்மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்து தல் சம்பந்தமாக -

அன்றைய சேர் ஜேம்ஸ் பீரிஸ் காலத்திலிருந்து இன்றைய சந்திரிகா பாண்டாரநாயக்கா குமாரணதுங்கா வரை -

தாம் கொடுத்த வாக்குறுதிகளிலிருந்து தர்ம நியாயமற்ற முறையிலே பிறழ்ந்துவிட்டார்கள்; தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டார்கள் என்பது எவராலும் மறுக்கப்பட முடியாத உண்மைதான்.




'ஆற்றைக் கடக்கும்வரை அண்ணை பிடி, தம்பி பிடி; ஆற்றைக் கடந்தபின் நீ ஆரோ, நான் ஆரோ' என்ற சிங்களத் தலைவர்களின் - அவர் களை வழிநடத்தும் பேரினவாதிகளின் - மனப் பாங்குதான் வாக்குறுதிகளைக் கைவிடும்படி அவர் களைத் தூண்டுவதிற் பெரும்பங்கு வகித்தது - வகிக்கின்றது - என்பதும் எவராலும் மறுக்கப்பட முடியாத உண்மைதான்!

ஆனால் -

தமிழ்த் தலைவர்கள் சிலரைப்பற்றிப் பேரினவாதிகள் செய்துள்ள 'கணிப்பீடு' சரியானதாக - எதிர்பார்த்ததைப்போன்று - அமைந்ததும் - அமைந்து வருவதும், வாக்குறுதிகளைக் கைவிடுவதற்கு அவர்களைத் தூண்டுவதிற் கணிசமான பங்கை வகித்தது - வகிக்கின்றது என்பதுதான் பலரின் கவனத்துக்கும் பரிசீலனைக்கும் உட்படாத ஓர் உண்மையாக இன்றும் இருந்து வருகின்றது.

தமிழர்கள் ஆரம்பத்தில் மிக மூர்க்கமாக எதிர்ப்பார்கள் -

பின்னர், படிப்படியாகத் தணிந்துவிடுவார்கள் -

பதவிக்காகவும் பணத்துக்காகவும் தம் கொள்கைகளையும் கோட்பாடுக ளையும் விட்டுக்கொடுப்பதற்கு - 'தியாகம்' செய்வதற்குப் - பலர் தயாராக இருக்கின்றார்கள் -

'தமிழ் மக்களின் தனிப்பெருந் தலைவன் நானே' எனச் சொல்லப்பட வேண்டும் என்ற ஆசை - பேராசை - ஒவ்வொரு தமிழ்த் தலைவனிடமும் 'ஒளிந்து' இருக்கின்றது -

இதைச் 'சாத்தியமாக்குவதற்காக' யாரையும் 'காட்டிக்கொடுப்பதற்கோ', 'கழுத்தறுப்பதற்கோ' தயங்காத 'தலைவர்களும்' தமிழர்களிடையே இருக்கின் றனர் -

தமிழ்த் தலைவர்களைப்பற்றிய பேரினவாதிகளின் இந்தக் கணிப்பீடு பொய்யானது - உண்மைக்குப் புறம்பானது - என இன்றுவரை நிரூபிக்கப் படாமல் இருப்பது தமிழ்மக்களின் துரதிர்ஷ்டம் - சாபக்கேடு!

இந்த நாட்டு மக்களைப் பொதுவாகவும் தமிழ்பேசும் மக்களைச் சிறப்பாகவும் பாதித்துவருகின்ற இனப்பிரச்சினை நீதியாகவும் - நியாயமாக வும் - உறுதியாகவும் - இறுதியாகவும் தீர்க்கப்படவேண்டுமானால் -

அரசு - விடுதலைப் புலிகளுடன் பேசி - திம்புக்கோட்பாடுகளின் அடிப்படையிலே பேசி - நீதியான தீர்வைக் கண்டு - அதை நடைமுறைப் படுத்தவேண்டும் -

தமிழர் விடுதலைக் கூட்டணி இதைத்தான் வலியுறுத்திவருகின்றது - அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இதைத்தான் வலியுறுத்தி வருகின் றது -

ரெலோ - புளொட் - ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய ஒவ்வொன்றும் இதைத் தலான் வலியுறுத்திவருகின்றன -

ஆனால் -

ஜனநாயக அடிப்படையில், தமிழ்மக்களின் விடுதலைக்கும், சமத்துவத் துக்கும் முன்னேற்றத்துக்குமான ஓர் அமைப்பை உருவாக்கி - அந்த ஒற்றுமைச் சின்னத்தின் உறுதியான குரலாக அந்தக் கோரிக்கையை ஒலிக்கச் செய்வதற்கு -

இவர்களுள் யாருமே - எந்த அமைப்புமே இன்னமும் தயாராகவில்லை!

ஜனாதிபதியை - எதிர்க்கட்சித் தலைவரை - வெளிநாட்டுத் தூதரக அதி காரிகளைச் சந்தித்து உரையாடுவதற்குத் தங்கள் தனித்தனிக் கட்சிகளின் சார்பில் செல்லவிரும்புகின்றார்களே தவிர, தமிழ்மக்களின் சார்பில் ; ஒரு பொது அமைப்பின் பிரதிநிதிகளாகச் செல்ல அவர்கள் விரும்புவதில்லை!

தமிழ் மக்களுக்கு எதிரான அக்கிரமங்களை யும் அநியாயங்களையும் அடாவடித்தனங்களை யும் கண்டித்து அறிக்கைவிடும்போதும் தத்தமது கட்சியை முதன்மைப்படுத்தவே விரும்புகின்றார் கள்!

தேர்தல்களைப்பற்றிய அறிவித்தல்கள் வெளி யாகும்போதெல்லாம் -

தேர்தலே வேண்டாம் - தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை தமிழ்ப் பகுதிகளில் இல்லவே இல்லை - அரசாங்கம் விடாப்பிடியாக நின்று தேர்தலை நடத்தினால் நாம் பகிஷ்கரிப்போம் - தமிழ்மக்களும் பகிஷ்கரிப்பார்கள் -

என்றெல்லாம் வீர'வசனம்' பேசுவார்கள் - சவால்விடுவார்கள்!

பின்னர் -

ஏதாவதொரு 'சாட்டை'க் கண்டுபிடித்துத் தேர்தலிலே - தத்தம் கட்சி யின் சார்பிலே போட்டியிடுவார்கள் - ஒற்றுமை இன்மை என்ற தமிழர்களின் 'பலவீனத்தை' மீண்டும் பகிரங்கப்படுத்துவார்கள்!

தமிழ்த் தலைவர்களிடையேயுள்ள இந்த அடிப்படைப் பலவீனம் களையப்படும்வரை தமிழ் மக்களுக்கு விடிவே இல்லை - விடுதலையே இல்லை - அழிவு என்பதே இறுதி முடிவு - என்பதை உணரத் தவறி னால் -

உணர்ந்ததுடன் நில்லாமல், உருப்படியான நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறினால் -

'காட்டிக்கொடுப்பவர்கள்', கதாநாயகர்கள் ஆவார்கள்! 'துரோகிகள்' தியாகிகள் ஆவார்கள்!

அரசு கொடுக்க முன்வரும் அற்ப சலுகைகளையும் 'ஆஹா அற்புதம்! அபாரம்!' என வாயெல்லாம் பல்லாக நின்று வரவேற்று தமிழ் மக்களின் அடிமைச் சங்கிலியை மேலும் இறுக்கிப் பூட்டுவார்கள்!

இந்த உண்மைகளை உணரும் நாள்தான் நாம் உய்யும் நாள் - நாம் உயரும் நாள் - உலகில் நாம் 'தமிழர்' என்று தலை நிமிரும் நாள்!

*- சித்தன்.*

## முன்பள்ளி விளையாட்டு

மானிப்பாய் மேற்கு திருவள்ளு வர் சனசமூக நிலைய முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 1.30 மணிக்கு சனசமூக நிலையத்தில் தலைவர் இரா.லோகேந்திரராஜா தலைமை யில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக வலி.தென் மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன் கலந்துகொள்வார். (ஐ-185)

## நாளை

ஆவணி 4
திங்கட்கிழமை
திதி: பிரதமை
காலை 6.52 வரை
துதியை
பின்னிரவு : 4.28 வரை
நட்சத்திரம் : பூரம்
பின்னிரவு 2.41 வரை
சுபநேரம்: 12.05 - 1.35
ராகுகாலம் : 7.35 - 9.05
(பழைய நேரப்படி)

## விசேட பஸ் சேவை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமா வதை முன்னிட்டு வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் காரைந கர் டிப்போ தினமும் மூன்று விசேட பஸ் சேவைகளை நடத்தவுள்ளது.

காரைநகரிலிருந்து மூளாய், சித் தன்கேணி, சுழிபுரம், பண்டத்தரிப்பு, தொட்டிலடி, மாகியப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம் ஆகிய பகுதிகளுக்கு ஊடாக - 740 இலக்க பாதையில் - இந்த விசேட பஸ் சேவை நடத் தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டது. (ஐ-135)

## உதயவாக்கு

நாம் மட்டும் தலை வணங்கிக் கேட்போமானால் குழந்தைகளிடம் இருந்து எத்தனையோ பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். - *காந்தி.*

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!



# சின்னஞ்சிறு விளம்பரம்

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

Dobermann Pincher நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (91298)

## காணி விற்பனைக்கு

சுன்னாகத்தில் நல்ல மண்வளம், நீர்வளம் உள்ள தோட்டமும், புலமும் சேர்ந்த ஒவ்வொன்றும் ஏறக்குறைய 50 பரப்பு விஸ்தீரணமான இரு காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. இராஜேந்திரம், மே/பா. எஸ். பீ.சிவஞானம், சட்டத்தரணி, இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (91247)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (BROILERS), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (91153)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து(பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (91066)

## வகுப்புக்கள் கணிதம், ஆங்கிலம்

ஆண்டு 6 -O/L வகுப்புகள் பயிற்சிகளுடன் நடத்தப்படுகின்றன. தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் (இருபாலாரும்) கற்கலாம். தொடர்பு: அ. ஞான சம்பந்தன், 67, கல்லூரி வீதி, நீராவியடி,; "லிங்கவாசா", நவாலி வடக்கு, மானிப்பாய்.(கடித மூலம்) (91317)

## லவ்பேட்ஸ் விற்பனைக்கு

லவ்பேட்ஸ்(பறவைகள்) கூட்டுடன் (10சோடி) விற்பனைக்குண்டு. தொடர்பு:- சீ.ஞானசேகரம் (ஆண்டவர்), சாவல் கட்டு, ஆனைக்கோட்டை. (91258)

## வீடு விற்பனைக்கு

யாழ்.பல்கலைக்கழகம் சென்றல் நேர்சிங் ஹோம் அருகில் சகல வசதிகளுடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு:- T.VIJAYARATNAM, 7 TEMPLE ROAD, JAFFNA. TEL.2383.(91246)

## விற்பனைக்கு

ஜெனரேற்றர் 2kW றொபின், வெல்டிங் கவர் எல்லா அளவுகளிலும் V.P.S. மின்சாரம் சேமித்து வைக்கும் சாதனம், ரெலிபோன் நெக்கிய விற்பனைக்கு உண்டு. தொடர்பு:கொக்குவில் சந்தி. T.P.2961. (91320)

வெள்ளை, பிறவுண் பொமனேரியன் நாய்க்குட்டிகள், டோமன பெண் நாய் மற்றும் யமுனாபாரி ஆடு குட்டியுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 169, மருத்துவபீட வீதி, திருநெல்வேலி. (91315)

## படிவம்

மாகாணப் பொதுச் சேவைச் சிற்றூழியர்களை மாகாண பொது எழுதுநர் சேவையின் வகுப்பு II பிரிவு "ஆ"வுக்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான படிவம் விற்பனையாகிறது. நாயகபாலன், மானிப்பாய். (91327)

## தவறிவிட்டது

பொயிட்டி அச்செழு, நீர்வேலியைச் சேர்ந்த R.சுமதி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.735473476V), விசேட அ.அட்டை (இல.0903008063) என்பன திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (91326)

## தவறிவிட்டது

சோரன்பற்று, பளையைச் சேர்ந்த சின்னையா ஜெயச்சந்திரன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 793084072V), விசேட அ.அட்டை (இல. 0915000166) என்பன பொலிகண்டி கந்தவனம் கோயிலுக்கு முன்பாகத் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் விக்னா தொலைத்தொடர்பகம், பொலிகண்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (91316)

எழுதுமட்டுவாழ் வடக்கு, அ.த.க. பாடசாலை மாணவன் சி.செல்வகுமார் என்பவருடைய வி.அ.அட்டை (இல. 091035775) கோப்பாய் விளையாட்டு அரங்க வீதிக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் ஒப்படைத்துதவவும். (91319)

நவாலி வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த கனகரத்தினம் சிவதர்ஷன் என்பவருடைய விசேட அ.அட்டை (இல.0905027894) ஆனைக்கோட்டைச் சந்திக்கும் அரசடிச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (மணிமண்டபத்திற்கு அருகாக) தகுந்த சன்மானம் வழங்கப்படும். (91321)

கந்தசாமி கமலாம்பிகை என்பவருடைய தே.அ.அ.(இல.575472826V), வி.அ.அ.(இல.0905009629), மானிப்பாய் இலங்கைவங்கி சே.க.புத்தகம் என்பன யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளி கோயிலில் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் முருகமூர்த்தி கோயில் வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (91324)

கனகலிங்கம் சுகிர்தம் என்பவருடைய தே.அ.அ.(இல.757082756V), வி.அ.அ.(இல.0902040151), யாழ்.பல்கலைக்கழக அ.அ.(இல.97A185) என்பன 15/12, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி வீட்டில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்துதவவும். (91325)

17-08-2001 அன்று நல்லூருக்கும் மானிப்பாய்க்கும் இடையில் கைச்செயின் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மானிப்பாய் அந்தோனியார் கோயிலுக்கு முன்பாக உள்ள பாபா படமாடத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (91332)

## நல்லூர் மஹோற்சவ வீடியோப் பிரதிகள்

இன்று பூர்த்தியாகும் நல்லூர்க் கந்தன் மஹோற்சவ இவ்வருடத்து வெளி வீதியுலாக் காட்சிகளின் வீடியோப் பிரதிகள் தரமாக ஒளிப்பதிவு செய்து கொடுக்கப்படும்.

**வரன் வீடியோ கொம்பிளெக்ஸ்**

கலட்டி வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
T.P.No. 3534

(91322)

## மாணவர் நிலைய கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்.பல்கலைக்கழக மாணவர் நிலையக் கட்டடத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மாணவர் ஒன்றியத் தலைவர் செ.கஜேந்திரன் ஆகியோர் கட்டடத் தொகுதியைத் திறந்து வைப்பர். (ஐ-7-6)

## காங்கேசனில் பொருள்கள் இறக்கம்

யாழ்ப்பாணம்.ஓக.19

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்துள்ள 'றுகுனுபுர' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ள அரிசி மற்றும் சீனியை இறக்கும் பணிகள் துரிதகதியில் நடைபெறுவதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-6)

## மிதிவெடியில் காயம்

வவுனியா,ஓக.19

கிளிநொச்சி நகரில் காணியைத் துப்புரவு செய்து கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் மிதிவெடியில் காயமடைந்து, கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நடராசா மரியமலர் (வயது56) என்பவரே காயமடைந்தார். (உ-3)

## வைத்திய சேவை

நல்லூர், வைமன் வீதியில் — "CENTRAL CLINIC" சென்றல் கிளினிக்.

- யாழ். போதனா வைத்திய சாலை MBBS டாக்டர்களினால் அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

நோயாளர்களைப் பார்வையிடும் நேரம்:
தினமும்-காலை 6.00-7.30 (புதியநேரம்)
மாலை 4.30-7.30 (புதியநேரம்)

(91314)

## 33ஆம் நாள் நீங்காத நினைவலைகள்

எமது நெஞ்சங்களில் அழியாத ஓவியமான
எமது குடும்பத் தலைவர்

தோற்றம் 16 - 05 - 1921



மறைவு 18 - 07 - 2001

**அமரர் வல்லிபுரம் துரைராசா**

எண் திசை நாயகரே
விண்மிசை சென்றவரே
மண்ணில் வாழும் நாளெல்லாம்
எண்ணி உமக்குச் செலுத்தும்
நினைவலைகள்!

இன்று (19-08-2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர் சர்பாக
மகன்
வி.ரி.ராஜேந்திரன்

*'இந்திரபவனம்'*
*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

(91318)

## வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகளுக்கு

இதோ ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!
பம்பலப்பிட்டியில் மிகையான சூழலில் மிகைப்படுத்தப்பட்ட அழகு மிளிர் தங்குமிட விடுதி

**ராஜ்கோ இன்**

கொழும்பு மாநகரில் பம்பலப்பிட்டி சென்.பீற்றேஸ் பாடசாலைக்கு அருகாக அமைந்துள்ள

**RAJCO INN** விடுதியின் சிறப்பம்சங்கள்

1. வெளிநாட்டு, உள்நாட்டு தொலைத் தொடர்பு வசதி.
2. வெளிநாட்டு பிரயாண விமான ரிக்கற் வசதி.
3. வாகன போக்குவரத்து வசதி.
4. இந்த விடுதியானது தங்குமிட வசதியுள்ள நிலப்பரப்பு பரந்ததும் விசாலமானதுமான நன்கு காற்றோட்டமுள்ள பாதுகாப்பான இடத்தில் அமைந்துள்ளது.

*மேலதிக விவரங்களுக்கு:*

திரு.கே.பாலேந்திரன்,
ராஜ்கோ இன்
27, ப்ரீட் பிளேஸ், பம்பலப்பிட்டி,
கொழும்பு - 4
தொலைபேசி 554065, 554066, 554067

**RAJ CO INN**
*PAREED PLACE,*
*BAMPALAPITIYA,*
*COLOMBO -4*

*தகவல்:* K.விமலராஜ்
'நவலோகம்'
நெல்லியடி, கரவெட்டி.

(91329

## நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துகின்றோம்

**புலோலி மேற்கு அருள்மிகு ஆலடிப்பிள்ளையார் கோயில்**

புனருத்தாரணத் திருப்பணி வேலைகளுக்காக முதற்கட்டமாக ரூபா ஐந்து லட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உதவியமைக்காக,



இந்து கலாசார மாண்புமிகு அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய

**K.N.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும் வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளருமான

உயர்திரு.

**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்**



அவர்களையும்

மனப்பூர்வமான நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- தர்மகர்த்தா சபை,
அருள்மிகு ஆலடிப் பிள்ளையார் கோயில்,
*புலோலி மேற்கு.*

(91323)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்**

இக்கல்லூரியில் பணிபுரிந்து வரும் எமக்கு அமைய அடிப்படையிலான நியமனக் கடிதங்கள் கிடைக்க அயராது உழைத்தமைக்காக-



மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
(செயலாளர் நாயகம், ஈ.பி.டி.பி.)
அவர்களுக்கும்

உயர்திரு.
**கே.வீ.குகேந்திரன்**
(ஜெகன்)
(நாடாளுமன்ற உறுப்பினர்)
அவர்களுக்கும்

உயர்திரு.
**சி.தவராசா**
(நாடாளுமன்ற உறுப்பினர்)
அவர்களுக்கும்

உயர்திரு.
**க.மணிபல்லவராஜன்**
(நிஷாந்தன்)
(பிரதேச சபைத் தலைவர் - நல்லூர்)
அவர்களுக்கும்

உயர்திரு.
**பூ.குணசீங்கம்**
(பிரதேச சபைத் தலைவர் வலி.கிழக்கு)
அவர்களுக்கும்

உயர்திரு.
**யு.எல்.ஏ.ரவி**
(பிரதேச சபை உபதலைவர் வலி.கிழக்கு)
அவர்களுக்கும்

உயர்திரு.
**கே.நவநீதன்**
(மோகன்)
(நெடுந்தீவுப் பொறுப்பாளர்)
அவர்களுக்கும்

எமது கல்விசாரா ஊழியர்கள் சார்பாக உளங்கனிந்த பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

- கல்வி சாரா ஊழியர்கள்-

(91304)

# இயற்கையோடு இணைந்த வழிபாடு; செல்வச் சந்நிதி ஆலயச் சிறப்பு இது

**தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

இன்று தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவ ஆரம்ப தினமாகும். இன்றைய நாளில் எமது சிந்தனை, செயல், மொழி யாவற்றையும் அவன்பால் திருப்பி அருள்பெறுவோமாகுக. முருகனடியார்கள் பலர் முருகன், குமரன், குகனென்று மொழிந்துருகுஞ் செயலை இங்கே காணலாம். அடியார்கள் பக்திப் பரவசத்துடன் கை தொழுது வணங்கி "முருகா! கந்தா! சரவணபவனே! முத்துக்குமரா! ஆற்றங்கரையோனே! வேலவா! கார்த்திகேயா! கலியுகவரதா! எமக்கருள் புரிந்து காத்திட வா! வா! என்று கல்நெஞ்சம் கரைந்தொழுகக் கண்ணீர் சொரிய அழும் காட்சி நெஞ்சை உருக்கும். கேட்போர், பார்ப்போர் அனைவரது பாவவினைகள் வெந்து சாம்பலாகும்.

சந்நிதி முருகனை அன்னதானக் கந்தன் என்றும் நல்லூர் முருகனை அலங்காரக் கந்தன் என்றும் அழைப்பார்கள். தனக்கென எளிமையான, தூய்மையான ஓர் ஆலயம் செல்வச் சந்நிதி தொண்டமனாற்றங் கரையிலே அமைக்க வேண்டும் என முருகன் திருவுளம் கொண்டதால், முருகன் சிறுவன் வடிவில் வந்து, சாதாரண கடற்றொழிலாளியாக வாழ்ந்த மருதர் கதிர்காமரைப் பூசகராக்கித் தன் ஞான சக்தியாகிய வேலைப் பிரதிட்சை செய்து பூசிக்குமாறு பணித்ததுடன், அவருக்குக் கதிர்காமப் பூசை முறைகளையும் காட்டிய திருவிளையாடலுடன் சந்நிதி ஆலயத்தின் தோற்றம் வளர்ச்சி பெறத் தொடங்கியது.

சந்நிதியில் இயற்கை வழிபாட்டு முறை பின்பற்றப்படுகின்றது. அதாவது ஆகமங்கள் சாராத வழிபாட்டு மரபு கதிர்காமத்தைப் போல் இங்கும் பண்டைத் தமிழர் பண்பாட்டிற்கமைய வாய்கட்டி மௌன பூசைகளை மேற்கொள்கின்றனர். அன்பு, அருள், தமிழ்ப்பண்பு, தூய்மை, பக்தி, அமைதி, மௌனம் ஆகிய மேலான மார்க்கங்களை இப்பூஜைவழிபாடுகள் கொண்டுள்ளன.

இங்கு ஓடும் தொண்டமனாறு 'வல்லி நதி' என்னும் பெயருடன் விளங்கியது. தொண்டைமான் என்ற அரசன் இதனைக் கடலுடன் வெட்டி சங்கமிக்கவிட்டான். இந்நதியில் கடல் நீர் உட்புகுந்தபடியால் இந்நதி உப்பு நீரானது. இந்த ஆலயத்தின் தல விருட்சம் பூவரச மரமாகும். உற்சவ காலங்களில் செல்வச் சந்நிதியில் மருதர் கதிர்காமரின் பரம்பரையைச் சேர்ந்த பருவமடையாத சிறுமியர் நெய்விளக்குக் கொண்டு ஆரத்தி எடுக்கும் மரபு இன்றும் பேணப்பட்டு



வருகின்றது.

### சந்நிதியும் கதிர்காமமும்

கதிர்காமத்திற் கொடியேற்றம் நடைபெறுவதற்கு முதல் நாள் செல்வச்சந்நிதியில் இருந்து வேல் வழியனுப்பு விழாவும் கதிர்காமத் தீர்த்தத்திருவிழா அன்று கதிர்காமத்திலிருந்து முருகன் சந்நதிக்குத் திரும்பி வரும் பொழுது வரவேற்பு வைபவமும் இன்றும் நடைபெற்று வருகின்றன. இந்நிகழ்ச்சிகள் கதிர்காமத்திற்கும் செல்வச்சந்நிதிக்கும் முருக வழிபாட்டுடன் இருந்த நெருங்கிய தொடர்புகளைப் புலப்படுத்தப்படுகிறது.

### இயற்கையான கொடியேற்றம்

செல்வச் சந்நிதியில் ஆகமச் சாயல் கொண்ட வானுயர்ந்த கோபுரங்களோ, விமானங்களோ, தூபிகளோ, கொடித்தம்பம், பலிபீடம் போன்றவைகளோ இல்லை. இங்கு மஹோற்சவதிற்கான கொடியேற்றம், கிரியைகள் நடைபெறுவதில்லை. இவ்வாலயத்தின் உட்திண்ணையில் வள்ளிக் கொடி தானாகவே முளைத்து உற்சவகாலத்தை உணர்த்துகின்றது. ஏனைய ஆலயங்களில் இல்லாத தனித்துவமான வழிபாட்டு மரபுகளில ஒன்றாக இது சந்நிதியில் இடம் பெறுவது முருகன் எப்பொழுதும் எளிமையான இயற்கையை விரும்புபவன் என்பதைக் காட்டுவதாகும்.

அன்னதானத்தால் சிறப்புப் பெற்ற இடம் சந்நிதியாகும். இங்கு உணவு உண்ணாமல் திரும்பும் பக்தர்கள் இல்லை எனலாம். இவ்வாலயத்தைச் சுற்றி 50 மடங்கள் இருந்ததற்கான சான்றுகள் உண்டு. ஸ்ரீமான் மயில்வாகனம் அடியாரின் சீடனாகிய சைவத்திரு செ.மோகனதாஸ் அவர்கள் "சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதானத் தொண்டை சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையினருடன் இணைந்து சிறப்பாக நடத்தி வருகின்றார். மேலும் சமயத்தை சமூக நோக்கில் சிந்தித்து பல் கலை, கலாசார பண்பாட்டுச் சமூக சேவைகளையும் குறிப்பாக 'ஞானச் சுடர்' என்ற மாதாந்த மலரை வெளியிடும் சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையினரின் செயற்கரிய செயல்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

பார்வதி மகனாகிய முருகன் சந்நிதியிலே மாட்டிடையன் போலவும், பசியுடை ஏழை போலவும், தெய்வீக அடியார் போலவும், வில்பிடித்த வேலன் போலவும், புனிதமான பிராமணன் போலவும், மயில் சேவல் போலவும் மக்களுடைய கண்ணுக்குப புனித காட்சிகளைக் காட்டி அருள் புரிந்துள்ளார் என்ற தெய்வீக வரலாறு பல உண்டு.

சமூகஜோதி
**கா.கணேசதாசன்**

முருகா! நீயே எம்மைக் காப்பவன்! நீயே சமாதான சுக வாழ்வைத் தருபவன்! பூமி, மனை, மக்கள், செல்வம், எல்லாம் தருபவன் நீயே! என்று பக்தர் கூட்டம் 'ஓம் சரவணபவ' என்ற ஆறெழுத்தைச் செபித்து வழிபாடு செய்ய அவரவர் வேண்டும் வரம் கொடுத்து அருள் புரிய சந்நிதியில் குமரப்பெருமான் கொலுவீற்றிருக்கின்றார். இவ்வாலயம் எமது மண்ணுக்கும் எமது இனத்திற்கும் கிடைத்துள்ள ஒரு மாபெரும் பொக்கிஷம். கலியுகக் கந்தனின் திருவருள் இங்கே பொங்கி நிறைந்து வழிகின்றது. நாம் உற்சவ காலங்களில் சென்று சந்நிதி முருகனை வழிபட்டு இம்மை மறுமை பலன்களைப் பெறுவோமாக!

# கோயில்களின் கட்டொழுங்கிற்கு நம்மை இசைவாக்கம் செய்வோம்

முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு அவர்கள் சிறந்த வரகவி, எள்ளலும் (Satire), நகைச்சுவையும் அவருக்குக் கைவந்த கலைகள். 'விகடகவி' என்ற புனைபெயர் அவருக்கு முற்றிலும் பொருந்துவதே. வழக்கமான நாலடிப் பாடல் மரபினை முறியடித்து ஐந்து அடி (விருத்த)ப் பாடல் இயற்றிப் புதுமை செய்பவர் அவர். அவரின் வழியிலே ஐந்தடிப் பாட்டு இயற்றும் இளங் கவிஞர் பரம்பரை ஒன்று உருவாகுவதை 'உதயனில்' வெளியாகும் நல்லூர்க் கந்தன் மஹோற்சவப் பாடல்கள் சிலவற்றிலே அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. இவற்றுக்கெல்லாம் பாராட்டும் வாழ்த்துக்களும் வழங்குவது நம்மனோர் கடன். வாழ்க அவர் கவித்துவம்!

'விகடகவி' அவர்கள், கடந்த சில நாள்களாய் நல்லைக் கந்தனையும் அவன் எழுந்தருளியுள்ள கோயிலையும் மையமாகக்கொண்டு சில கருத்துக்களைத் துணிந்து தமது பாடல்களில் வெளிப்படுத்தி வருகிறார். அவற்றுட் பல வரவேற்கத் தக்கவை; சிந்தனையைத்தூண்டி உணர்வூட்டுபவை; வரவேற்கின்றோம்.

ஆனால், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் நேரக்கட்டுப்பாடு பற்றிய அவருடைய கருத்து மீளாய்வுக்குரியது. இவ்வாறு கூறுவதால் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் நிருவாகத்துக்கு மிண்டு கொடுக்க முற்படுகின்றேன் என்று பொருள்கொள்ள வேண்டுவதில்லை. அதற்குத் தகுதியோ தரமோ படைத்தவன் நான் அல்லன். 'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி' அவனுடைய ஏவலின் வழி நின்று ஒழுகுபவர் ஒருவர் உள்ளார். அவருக்கென்று அவர் முடிவெடுப்பதில்லை என்பதால் விகடகவியின் கருத்துக்கான முடிவினை அந்த ஒருவரை ஊடகமாகக் கொண்டு 'அவன்' நிறைவேற்றுவான் என்பதற்கு அணுவளவேனும் ஐயம் இல்லை.

ஆனால்....

'விகடகவி'யின் கருத்து எந்த அளவுக்கு ஏற்புடைத்து என்பதை மிகமிகச் சாமானியனான வழிபாட்டினன் என்ற வகையிலே நான் சிந்தித்து, உணர்ந்து கொண்டதை இங்கு குறிப்பிட விழைகின்றேன்.

(1) தொலைவில் இருந்து நல்லூரை நாடிவருவோர்; மாலை ஆறு மணிக்குப் பின் வந்து ஏமாந்து செல்ல நேரிடுகின்றது என்பது 'விகடகவி'யின் மனக்குறை (இதனைச் சிவபெருமான் மீது ஏற்றி அவர் ஆறுமணிக்குப் பின வந்து ஏமாந்துபோய்க் கோபத்துடன் கயிலை திரும்பி மலையாளாகிய அம்பாளிடம் மணிக்கூட்டை எடுக்குமாறு கேட்பதாய் நகைச்சுவை படக்கூறுகின்றார்.)

'போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார் அவர்பின்பு' புகுகின்ற அடியார்கள் நல்லூர் நேரக் கட்டுப்பாட்டினைப் பல்லாண்டுகளாய் உணர்ந்து அதற்கேற்பத் தங்களை இசைவாக்கம் செய்துகொண்டுவிட்டார்கள்.

முற்காலத்திலே, புகைவண்டிப் பயணம் செய்தோர் போலவும் பரீட்சைகளுக்குச் சென்ற பரீட்சார்த்திகள் போலவும் (இக் காலம் போல அல்ல!) குறித்த நேரத்துக்குக் குறித்த நிலையங்களுக்குச் செல்லும் வழியினைப் பின்பற்ற நல்லூர் அடியார்கள் தவறுவதில்லை.

இன்று பெரும்பாலான கோயில்களிலே நேரந் தவறாமையை அந்த அந்தக் கோயில் அறங்காவலர்கள் கடைப்பிடிக்கிறார்கள் என்றால், அதற்கு வழிகாட்டிய முன்னோடி ஆலயம் நல்லூர்க் கந்தன் ஆலயமே என்பதை அறியாதார் அறியாதாரே.

'மலை முகம்மதுவை நாடிச் செல்லாது முகம்மதுவே மலையை நாடிச் செல்வது தான்' எதார்த்தம். அடியவர் கந்தன் அருள்நாடிக் குறித்த நேரத்துக்குச் செல்வதுதான் 'அகந்தைக் கிழங்கினை அகழ்ந்தொடுக்க உகந்த வழி. இவ்வுண்மையினை உணர்ந்தோர் பல்லாயிரக் கணக்கில் திரண்டு நெருக்குண்டு தள்ளுண்டு 'முருகனுக்கு அரோகரா' சொல்லுவதும் கண்ணீர்வார மெய்ம்மயிர் பொடிப்பக் கசிந்துருகி வேண்டி வழிபடுவதும்' நாம் மகோற்சவ காலத்தில் காணும் உருக்கமான காட்சிகள்.

அப்பர் சுவாமிகள், தமது பொதுத் திருத்தாண்டகத்தில்-

குகஸ்ரீ க.சொக்கலிங்கம்
(சொக்கன்)

'உண்பதன்முன் மலர்பறித்திட்டு, உண்ணாராகில்' எனக் குறிப்பிட்டுள்ளதை இவ்விடத்தில் நினைவு கூர்வது பொருத்தம் உடைத்து. "(வண்டுகள் தேனை) உண்ணுமுன்பு, அதிகாலைப் பொழுதில் மலர்பறித்து இறைவனுக்கு இட்டபின்பு உண்ணுதல் வேண்டும்" என்பதை இந்த அடி உணர்த்துகின்றது. இதனைக் கூறக் காரணம் நாம் இறை வணக்கத்திற்கும் கோயில் வழிபாட்டிற்கும் உரிய கால நேரத்தை ஒதுக்கிப் பயன் செய்வதே உகந்தது' என்பதை வலியுறுத்தவே. எமக்கு வசதியான நேரத்தினை, அவற்றிற்கேற்ற வகையிலே பிறர் வகுத்துத் தரல்வேண்டும் என எதிர்பார்த்தல், எமது வழிபாட்டு நோக்கத்தினையே ஊறு செய்வதாகும்.

(2) வேகாமல் வெந்து, துடியாமல் துடித்து ஓட்டம் ஓட்டமாகத் திருவீதி உலா நடைபெறுகின்றதே என்பதும் 'விகடகவி'யின் ஆதங்கம்.

*வேலன் தையிய வெறியயர் களனும்*
*காடுங் காவும் கவின்பெறு*
*துருத்தியும்*
*யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்*
*சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்*
*கடம்பும்*
*மன்றமும் பொதியிலும் கந்துடை*
*நிலையிலும்*

என்று திருமுருகாற்றுப்படையில், அக்கால வழிபாட்டிடங்கள் வரிசைப் படுத்தப்படுகின்றன. ஊர்களிலும் ஊர்ப்புறங்களிலும் மலைகளிலும் காடுகளிலும் நடையாய் நடந்து, பசி, தாகம், தளர்ச்சி என்பவற்றிற்கு இலக்கான போதும் மனம் தளராது, யாத்திரை செய்து வழிபட்டனர் அக்கால அடியார்கள்; சைவ நன்மக்கள். அப்பர் சுவாமிகள்.

*'ஆளும் நாயகன் கயிலையில்*
*இருக்கைகண்டு' அல்லால்*
*மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'*

என்று பத்திவைராக்கியத்தோடு கயிலை யாத்திரையை மேற்கொண்டமை அவர்களுக்கு வழிகாட்டியிருக்கலாம். விஞ்ஞான மயமாகி, உலகமே கிராமமாகி, பயணவசதிகள் பெருகிவரும் இக் காலத்தில், கோயில் யாத்திரை என்பது 'பழைய சிரமத்திற்கு இடமாக வேண்டியதில்லை. ஆனால் கோயில்களின் கட்டொழுங்குக்கு நம்மை இசைவாக்கம் செய்துகொள்வது நல்லதல்லவா?

3. மாலை ஆறுமணிக்குப் பிறகு நல்லூரின் சூழல் களியாட்ட விழா அரங்காய் உருவெடுப்பதை நினைவு கூர்ந்தால், 'நேரக்கட்டுப்பாடு' எவ்வளவு அவசியம் என்பது சொல்லாமலே தெரியவரும் உண்மையாகும். ▲

# இலக்கியச் சுவை விஞ்சி நிற்கும் இரட்டையரின் இனிய பாடல்கள்!

**இலக்கியச்சோலை**

தமிழ்மொழியிலே இலக்கியச் சமுத்திரத்திலே ஆழ்ந்தால் எத்தனை வகையான முத்துக்கள் கிடைக்கின்றன. இதோ நகைச்சுவை, பொருட்சுவை, இசைச்சுவையுள்ள சில பாடல்கள். இரட்டைப் புலவர்கள் இரு சகோதரர்கள். மூத்தவர் முதுசூரியர், இளையவர் இளஞ்சூரியர். ஒருவர் முடவர், ஒருவர் குருடர். ஆனால் இருவருமே புலமை மிக்கவர்கள்.

ஒருநாள் இருவரும் வழி நடந்து களைத்து ஓருருக்கு வந்தனர். முடவரைக் குருடர் தோள்மீது தூக்கிச் செல்ல முடவர் வழிகாட்டுவார். இப்படியே அவர்கள் பிரயாணம் செய்வது வழக்கம். ஓரிரவு ஒரு பிள்ளையார் கோயிலிலே தங்கினார்கள். நல்ல நித்திரையில் இருந்த இவர்களது ஆடையில் இருந்த துணிமுடிப்பில் பணம் இருந்தது. யாரோ கள்வர் முடிச்சை அவிழ்த்துப் பணத்தை எடுத்துவிட்டார்கள்.

விடிய எழுந்து பார்த்தார்கள், பணம் இல்லை. மற்றவர்கள் பணம் களவுபோனால் வாயிலடித்து, வயிற்றிலடித்து அழுவார்கள். ஆனால் இரட்டையர்களோ அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. பிள்ளையார் கோயிலிலே அவர்முன்னே களவு நடந்ததே. யாருடைய பாதுகாப்பில் நாம் இருக்கிறோமோ அப்பாதுகாப்பில் தவறு நடந்தால் பாதுகாப்பவரில்தானே தவறு.

முதுசூரியர் பாடலை ஆரம்பித்தார்.

*தம்பியோ பெண் திருடி தாயாருடன் பிறந்த*
*வம்பனோ நெய்திருடும் மா மாயன் - நம்பிய இம்*
*மூத்தவனோ நம்பால் முடிச்சவிழ்த்தான் என் செயலாம்*
*கோத்திரத்துக்குள்ள குணம்.*

இதில் முதல் இரு அடிகளும் மூத்தவரும் இறுதி இரு அடிகளும் இளையவரும் பாடியது என்பது ஐதிகம்.

அதாவது இந்த விநாயகனது கோத்திரத்தை எடுத்துப்பார்த்தால் இவனது தம்பியாராகிய முருகனோ வேட்டுவர் அரசன் மகள் வள்ளியைக் களவாக எடுத்துச்சென்ற பெண் திருடி. மற்றப்படி தாய்வழி மாமனாகிய மாயனான கண்ணன் வெண்ணெய் திருடி கோபியரிடம் கையும் மெய்யு மாக அகப்பட்ட கள்வன். அப்படி இருக்கும்போது நாம் எங்களைக் காப்பாற்றுவான் என்று நம்பிவந்த இந்த மூத்தவனாகிய விநாயகன்தான் எங்களது பணமுடிச்சை அவிழ்த்திருக்கவேண்டும். இது இவர்கள் கோத்திரத்துக்குள்ள குணமாயிற்றே நாங்கள் என்ன செய்ய முடியும்? என்று பாடிய உடனே விநாயகரருளால் திருடப்பட்ட பணம் அவர்களுக்குக் கிடைத்தது.

கூழ் ஆனாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்ற பழமொழிக்கிணங்க இருவரும் ஆற்றங்கரைக்குச் சென்று தமது கந்தை ஆடையை ஆற்று நீரிலே தோய்த்து தப்பி அடித்தார்கள். அது ஆற்றோடு போய்விட்டது. ஆறுபோகும் வேகத்தில் முடவரும், குருடரும் என்ன செய்யலாம். அவர்கள் மனம் வருந்தவில்லை ஒருபாடல் மூலம் தங்களையே தேற்றிக்கொண்டார்கள். அப்பாடல் பின்வருமாறு

*அப்பிலே தோய்த்திட்டடித் தடித்து நாளுமதை*
*தப்பினால் நம்மையது தப்பாதோ - இப்புவியில்*
*ஆனாலும் கந்தை அதிலுமோராயிரங்கண்*
*போனாலும் போச் சென்ன போ*

நீரிலே இந்த ஆடையைத் தினமும் தோய்த்துத் தப்பு தப்பென்று தப்பி அடித்தால் அது என்ன செய்யும். தொல்லை தாங்காது தப்பிப்போகத்தானே பார்க்கும். பரவாயில்லை அது ஆயிரம் பீத்தல் உடைய பழைய கந்தைதானே அது. போனாற் போகட்டுமே என்று தம்மைத்தாமே திருப்திப் பட்டுக்கொண்டனர் இரட்டையர்.

இப் பாடல்களில் உள்ள எளிமை, கருத்துச் செறிவு, நகைச்சுவை என்பன கற்போர் மனதை அப்படியே கவர்கின்றன. அதுமட்டுமல்லாது வெற்றிவந்தபோது மகிழாமலும், தோல்வி வந்தபோது துவளாமலும் இருக்கும் ஞானியின் தன்மையை இதுகாட்டுகிறது. மலையில் இருக்கும் ஒருவன் மலையே குலைந்தாலும் நிலைகுலையாமல் இருப்பதற்கு இவ்வகையான பாடல்கள் உதவுகின்றன.

உ.தங்கா

# பிறந்தநாள் வாழ்த்து

19~08~2001

HAPPY BIRTHDAY



சட்டத்தரணி பொன்.வெற்றிவேலு

அவர்கள் இன்று ஞாயிறு தனது பிறந்தநாளை யாழ்ப்பாணத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை வாழ்த்துபவர்கள்:

பிள்ளைகள்:- குமுதினி (மகள்), றஞ்சி (மகள்),
சாந்தி (மகள்),
கிருபாகரன் (மகன்) (பிரான்ஸ்),
ஜெயந்திரன் (மகன்) (பிரான்ஸ்).

*122/10,*
*ஆனைப்பந்தி,*
*யாழ்ப்பாணம்.* (91228)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோண்டாவில் மேற்கு மக்கள் முன்னேற்றக் கழகத்திற்கும்
சனசமூக நிலையத்திற்கும்

புனர்வாழ்வு அமைச்சிலிருந்து நிதி ஒதுக்கிக் கொடுத்தமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு,
புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு
தமிழ்மொழி விவகாரங்கள் அமுலாக்கல்
இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர்

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்



நல்லூர் பிரதேச சபைத் தலைவர்

**மணிபல்லவராஜன்**

(நிசாந்தன்) J.P.U.M.

அவர்களையும்

*பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

கோண்டாவில் மக்கள் முன்னேற்றக் கழகம்,
கோண்டாவில் மேற்கு மக்கள்.

(C/17909)

# 33ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னத்துரை ரட்ணசோதி

(பெரியராசா)

| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 11-07-1953 | 18-07-2001 |

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
இனிய கதைகள் பல பேசி,
இதமான வாழ்வு தந்து,
இங்கிதமாய் நாம் வாழ,
சீராட்டி எமை வளர்த்து,
சீர்நெறி புகட்டிய எம் அப்பாவே!
மனசுக்குள் அடுக்கி வைத்த ஆசைகள்
நனவாகும் என்று நாமிருக்க
மனையாள் தனையும் மறந்து
மக்களையும் பிரிந்து சென்றதேனோ?

*புன்னாலைக்கட்டுவன் தெற்கு,*
*சுன்னாகம்.* (91290)

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

# விமானப்படைக்கு நிதி நெருக்கடி விமானக் கொள்வனவு சாத்தியமில்லை!

கொழும்பு,ஓக.19

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தில் இழக்கப்பட்ட போர் விமானங்களுக்குப் பதிலாக புதிதாகப் போர் விமானங்கள் எதனையும் விமானப் படையினர் உடனடியாகக் கொள்வனவு செய்ய மாட்டார்கள் என விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விமானப்படையினர் பெரும் நிதி நெருக்கடியில் இருப்பதாலேயே இழக்கப்பட்ட விமானங்களுக்குப் பதிலாக புதிய விமானங்கள் கொள்வனவு செய்யப்படாதெனவும் தெரிவிக்கப் படுகிறது.

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத் தாக்குதலில், ஓடு பாதைக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு கிபிர் விமானங்கள், ஒரு மிக் விமானம், மூன்று கே-8 ரக பயிற்சி விமானம், எம்.ஐ.24 ரக ஹெலிக் கொப்டர் ஒன்று, எம்ஐ.17 ரக ஹெலிக் கொப்டர் ஒன்று என்று எட்டு வானூர்திகள் முற்றாக அழிக்கப்பட்டன.

இதைவிட விமானத்தளத்தில் பாதுகாப்புக் கூடாரங்களினுள் நிறுத் தப்பட்டிருந்தவற்றில் மேலும் இரு கிபிர் விமானங்களும் ஒரு மிக் 2 விமானமும் இரு பெல் - 412 ரக தாக்குதல் ஹெலிகொப்டர்களும் முற்றாக அழிக்கப்பட்டன.

இதேநேரம், இந்தப் பாதுகாப்புக் கூடாரத்தினுள் இருந்த மேலும் நான்கு கிபிர் விமானங்களும், ஒரு பெல் - 412 ரக ஹெலிக்கொப்டரும், இரு பெல் - 412 ரக ஹெலிக்கொப்டரும் (ஜனாதிபதி மற்றும் முக்கிய பிரமுகர்கள் பயன்படுத்துவது) பலத்த சேதமடைந்தன.

இந்த நிலையில் தற்போது தம் வசமிருக்கும் குண்டு வீச்சு விமானங்கள் மற்றும் தாக்குதல் ஹெலிக்கொப்டர்களுடன் நிலைமைகளைச் சமாளிக்க முடியுமெனவும், குறுகிய காலத்தினுள் புதிய வானூர்திகளைக் கொள்வனவு செய்வதென்பது சாதாரண விடயமல்ல எனவும் விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் புதிய போர் விமானமொன்றைக் கொள்வனவு செய்யக் குறைந்தது ஆறு மாதங்கள் செல்லுமெனவும், பணக்கொடுப்பனவு ரீதியில் பார்க்கும்போது கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட அதே ரக விமானங்களைத் தற்போது கொள்வனவு செய்ய ஒவ்வொன்றுக்கும் மேலதிகமாக 15 வீதம் செலவேற்படுமெனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.(ஐ)

### புலிகளுடன் பேசத் தவறினால்

# பொருளாதார வீழ்ச்சியை எவராலும் தடுக்கமுடியாது

### உல்லாசத்துறை நிறுவனங்கள் எச்சரிக்கை

கொழும்பு.ஓக.19

அரசாங்கம் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச்சு நடத்தத் தவறினால் உல்லாசப் பயணத்துறையின் வீழ்ச்சியைக் கட்டுப் படுத்தவே முடியாது. அத்துடன் இதனால் ஏற்படும் பாரிய பொருளாதார வீழ்ச்சியையும் எவராலும் தடுத்து நிறுத்த முடியாது போய்விடும்.

- இவ்வாறு எச்சரித்திருக்கின்றன உல்லாசப்பயணத்துறை நிறுவனங்கள்.

அரசாங்கத்தின் முக்கிய வருமானங்களில் ஒன்றாக விளங்கிய உல்லாசப் பயணத்துறையில் தற்போது ஏற்பட்ட பாரிய பின்னடைவானது அரசாங்கம் உடனடியாக யுத்தத்தை நிறுத்திப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்பதையே காட்டுகிறது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தைத் தாக்கி அழித்த புலிகள், இந்த நடவடிக்கை மூலம் அரசாங்கத்தின் பொருளாதாரத்தைச் சீகுலைப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள் எனத் தெரிகிறது.

அவர்களின் அந்த நோக்கம் தற்போது வெற்றியடைந்துள்ளது என்றே கூறவேண்டும்.

இதன் பின்னரும் புலிகளுடன் பேசி சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் நாட்டில் பொருளாதார வீழ்ச்சியும் பொருளாதார நெருக்கடியும் ஏற்படும் என பொருளியல் நிபுணர்கள் அடிக்கடி எச்சரித்து வருவது மிக விரைவில் சாத்தியமாகிவிடும் - என்றும் அவை எச்சரித்திருக்கின்றன. (க-4)

## முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.19

கந்தரோடை ஸ்ரீ சுப்பிரமணிய சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கண்ணன் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலையத் தலைவர் அ.தற்பரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் க.கமலசேகரன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் தெற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.செல்வவிநாயகர் சிறப்பு விருந்தினராகவும், கந்தரோடை கிராம அலுவலர் க.திருநாவுக்கரசு கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (-3-7)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 37 வயதுடைய, சித்திரை முதலாம் பாதம் நட்சத்திரமுடைய, கொழும்பு நகரில் நிரந்தர அரச தொழில் (SLTS Class I) புரியும் மணமகனுக்கு 33 வயதுக்குட்பட்ட, படித்த மணமகளைத் தாயார் தேடுகின்றார். சகல விவரங்களுடனும், அண்மையில் எடுத்த photo உடனும் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பியனுப்பப்படும்

*அனுப்பவேண்டிய முகவரி:*

**MR.BAVAN**
**No.521/3, Galle Road,**
**WELLAWATTE,**
**COLOMBO - 6.**

(91094)



## கொழும்பில் தங்குமிட வசதி

சகல வசதிகளுடன், குறைந்த செலவில், நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில் No. 89, HINNY APPUHAMY MAWATHA, Co - 13இல் அமைந்துள்ளது *"VANI IN"* லொட்ஜ். தங்குமிடம் தேவைப்படுவோர் மேற்படி விலாசத்தைப் பதிவுசெய்து வரலாம். மேலதிக விவரமறிய: T.P. 01-433182, 472582

(90555) - முகாமையாளர்.


# இரண்டாம் மாத நினைவஞ்சலி

வட்டக்கச்சி மகாவித்தியாலய முன்னாள் அதிபரும்,
கிளிநொச்சி மாவட்ட கல்விப்பணிப்பாளரும், வன்னி
மாவட்ட கல்வி இணைப்பாளருமாகிய

அமரர் **பொன்.சபாபதி** அவர்களை

62ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்.
தங்களின் முழுநேர முயற்சியால் வட்டக்கச்சி மகா
வித்தியாலயம் சகல துறைகளிலும் வெற்றியீட்டிய பெருமை
(சாரணியம், பெண்கள் சாரணியம், விளையாட்டு,
உடற்பயிற்சி, உயர்கல்வி, நடனக்கலை, நாடகத்துறை,
பேச்சு வன்மை முதலிய துறைகள்) வட்டக்கச்சியின்
தந்தையாகிய உங்களுக்கே உரியது.
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**பு.காண்டீபன்** (Ph.III)
*(பழைய மாணவன், குருளைச் சாரணர் 82-85)*
*லண்டன்.*

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

(91274)

# இரண்டாம் மாத நினைவஞ்சலி

தோற்றம்
01
-
02
-
1938



மறைவு
19
-
06
-
2001

காங்கேசன்துறைக் களஞ்சியப் பொறுப்பாளர்

**திரு.ச.வேல்மாறன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் பொன்.சபாபதி

அவர்கள் மறைந்தமையையிட்டு அன்னாரின் இரண்டாம் மாத நினைவாக அமரருக்கு அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் அவர் பிரிவால் வருந்தும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!*

*317, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/17890)

நிர்வாகம்,
*யாழ்.மாவட்ட பேக்கரி*
*உரிமையாளர் சங்கம்.*

# வியாங்கொடையில் அடுத்த மாதம் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி

## அங்கு செல்லும் யாழ்.வீரர்களின் விவரம்

யாழ்ப்பாணம்,ஒக.19

தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ள மாகாணங்களுக்கிடையிலான பாடசாலை மெய்வல்லுநர் மற்றும் பெரு விளையாட்டுப்போட்டிகள் அடுத்தமாதம் வியாங்கொடையில் உள்ள சயான் கல்விப் பீடத்தின் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கென மாகாண மட்டத்தில் நடைபெற்ற மாவட்டங்களுக்கிடையிலான போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்ற வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

வலைப்பந்தாட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 8ஆம், 9ஆம், 10ஆம் திகதிகளிலும் மெய்வல்லுநர் போட்டிகள் 27ஆம், 28ஆம் 29 ஆம், 30ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ள மாணவர்களின் பெயர் விவரங்கள் பாடசாலைகள் ரீதியாக வருமாறு:-

☆ சென்.ஜோன்ஸ் கல்லூரி:- எம்.எம்.சதீஸ், ரி.கிறிஸ்ரி அன்ட்று, ஆர்.உதயகீதன், ஆர்.நிரோன்.

☆ காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தி:- எஸ்.புஸ்பலிங்கம்.

☆ நெடுந்தீவு ம.வி:- ஏ.ராகவன்.

☆ மகாஜனக் கல்லூரி:- ரி.பரணிதரன், எஸ்.கமலமோகன், எஸ்.துசிதரன், கே.சேதுபிரியா, பி.கார்த்திகா.

☆ சென்.பற்றிக்ஸ் கல்லூரி:- ஜே.ஜி.வசிதரன், ஜி.செல்வின் லொயிட், ஏ.ஆர்.சூர்சில், ரி.டி.கிறிஸ்ரி.

☆ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி:- என்.குககேசுரன், பி.செல்வகுமார்.

☆ நாவாந்துறை றோ.க.த.க.பாடசாலை:- கே.பாலமுகுந்தன், கே.கஜநிதி, கே.அன்ரன்ராஜ்.

☆ உடுப்பிட்டி அ.மி.த.க.பாடசாலை:- என்.ஆதவன், எஸ்.வசந்தன்.

☆ அருணோதயக் கல்லூரி:- வி.ரதீபன்.

☆ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி:- எம்.சிவாஜி, ஜே.பிரதீபன், எம்.பிரதீபன்.

☆ யாழ்.இந்துக் கல்லூரி:- ஜி.விநோதன்.

☆ அத்தியார் இந்துக் கல்லூரி:- எஸ்.தனுஷன், ரி.மோகனபிரியா.

☆ மல்லாகம் ம.வித்தியாலயம்:- எஸ்.பிரகாஸ், ரி.பகீஸ்வரன்.

☆ ஹாட்லிக் கல்லூரி:- கே.கிருபாகரன், என்.டினேஸ்.

☆ இணுவில் இந்துக் கல்லூரி:- கே.துசிந்தன்.

☆ நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம்:- கே.ரதீஸ்வரன்.

☆ இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி:- ஆர்.விமலச்சந்திரன், ஏ.கமல் கிறேசியன், ஜே.யூட் நிறஞ்சன்.

☆ மானிப்பாய் இந்துக் கல்லூரி:- கே.அமிர்தராஜ்.

☆ யாழ்ப்பாணக் கல்லூரி:- ஜே.லக்ஸ்மன்

☆ யாழ்.மத்திய கல்லூரி:- எஸ்.விஜயகுமார்.

☆ யூனியன் கல்லூரி:- கே.கஜேந்திரன்.

☆ கொக்குவில் இந்துக் கல்லூரி:- இ.வினோஜா.

☆ ஸ்ரான்லிக் கல்லூரி:- கே.தர்சினி, வி.தர்சினி, எஸ்.சலோஜா.

☆ சாவகச்சேரி இந்துக் கல்லூரி:- கே.ஜானகி, கே.கோமதி.

☆ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி:- ஏ.கிருஷானி.

☆ மானிப்பாய் மகளிர் கல்லூரி:- கே.எழிலரசி, கே.ரமணி.

☆ ஸ்கந்தவரோதயக் கல்லூரி:- எஸ்.சுமஜினி.

☆ சென்.சாள்ஸ் மா.வி.:- கே.பவித்ரா.

☆ வட்டு.இந்துக்கல்லூரி:- பி.நந்தினி, பி.தயாளினி.

☆ யாழ்.இந்து மகளிர் கல்லூரி:- எம்.அர்ச்சனா.

☆ வேம்படி மகளிர் கல்லூரி:- பி.பிரியதர்சினி, ஜே.தமிழினி.

☆ உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி:- ஏ.அருஸ்ஜா, என்.தயா.

☆ பரு.வட இந்து மகளிர் கல்லூரி:- எஸ்.தயாளினி.

☆ வட.மத்திய கல்லூரி:- எஸ் சரிதா.

☆ பரு.மெதடிஸ்த பெண்கள் கல்லூரி:- என்.சாந்தநாயகி, பி.தரணி.

☆ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி:- ஏ.பாமினி.

☆ வேலணை துரைசாமி வித்தியாலயம்:- ரி.கார்த்திகா.

வலைப்பந்தாட்டத்தில் 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் இராமநாதன் கல்லூரியும், 17 வயதுக்குட்பட்ட பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும், 19 வயதுக்குட்பட்ட பிரிவில் யூனியன் கல்லூரியும் மற்றும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியனவும் -

கரப்பந்தாட்டத்தில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மகாஜனக் கல்லூரியும் பங்குபற்றவுள்ளன. (ஐ-10)




வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் திருநெல்வேலியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்திற்கு மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான மேசைகள், வாங்குகள் ஆகிய தளபாடங்களை அண்மையில் அன்பளிப்புச் செய்தது. கழகத் தலைவர் டாக்டர் சி.சதாசிவம் தளபாடங்களைச் சைவச் சிறுவர் இல்லத்தின் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்.)

# திகதியிடாத பதவி விலகல் கடிதம் அமைச்சர்களும் வழங்கத் தயார்!

கொழும்பு,ஒக.19

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அமைச்சர்கள் சிலரும் திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பிக்க முன்வந்துள்ளனர் என கொழும்புச் செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதற்கமைய உணவு, சந்தைப்படுத்தல் அமைச்சரும், ஆளுங்கட்சியின் பிரதம கொரடாவுமான ரெஜி ரணதுங்க, தொழில் அமைச்சர் அலவி மௌலானா ஆகியோர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய முன்வந்துள்ளனர் என்றும் -

நாளை திங்கட்கிழமை இந்த அமைச்சர்கள் இருவரும் தமது திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் -

அந்த செய்தி நிறுவனங்கள் மேலும் தகவல் வெளியிட்டுள்ளன.

இதேவேளை -

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஏனைய அமைச்சர்கள் பலரும் இவ்வாறு தமது திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளனர் என்று அமைச்சர் அலவி மௌலானா செய்தி ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

27 பிரதி அமைச்சர்கள் தமது திகதி குறிப்பிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை கடந்த வியாழனன்று ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தமை தெரிந்ததே. (ஐ-7)

### மாட்டுவண்டில் சவாரிப் போட்டி

அளவெட்டி வடக்கு அறிவொளி சனசமூக நிலையம் நடத்தும் மாட்டு வட்டிச சவாரிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கந்தரோடை சவாரித்திடல் மைதானத்தில் நடைபெறவுள்ளது (ஐ)

### விபத்தில் 10 பேர் பலி!

கொழும்பு,ஒக.19

ஹிங்கிர, உடுவந்தலையில் உள்ள ரயில்வே கடவையில் கடந்த வியாழனன்று பிற்பகல் 11.45 மணியளவில் இடம்பெற்ற ரயில் - பஸ் விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்; 35 பேர் காயமடைந்தனர்.

பந்துலுமுனையில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் வண்டியும், நீர்கொழும்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (உ-10)



சமாதானத்திற்கான சுவரொட்டிக் கண்காட்சி அண்மையில் யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் இடம்பெற்றது. பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.பிரதிநிதி றொப் டுவான் சுவரொட்டிகளைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். அருகே வை.எம்.சி.ஏ. தலைவர் டி.ஆர்.அருமைநாயகமும் உள்ளார். (ஐ-1)

## வாசகர் திருமுகம்

# ஏன் இந்தக் குழையடிப்பு?

அண்மைக்காலமாக பத்திரிகைளில் குறிப்பிட்ட ஒரு விளம்பரம் மீண்டும் மீண்டும் வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. விளம்பரம் ஒன்றுதான். ஆனால் அதனை பலர் பலவிதமாகக் கொடுக்கிறார்கள். அதன் சாராம்சம் இதுதான்:- இந்தச் சேவையினை வழங்கியதற்காக இந்த, இந்தத்துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கும், அந்த அமைப்பின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளருக்கும், அந்தந்தப் பிரதேசப் பொறுப்பாளரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இப்படியான ஒரு பாராட்டுதல் கட்டாயம் தேவைதானா? அப்படிப் பாராட்டும் அளவிற்கு அவர் என்ன வெட்டிவிழுத்தி விட்டார்? ஓர் அமைச்சர் என்ற ரீதியில் தனது கடமையைத்தானே அவர் செய்தார். மக்களுக்கென சேவை வழங்குமாறு அவரது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து தானே அவற்றை வழங்குகின்றார். ஏதோ தனது சொந்த வைப்புப் பணத்திலிருந்து அதனை வழங்கியது போலல்லவா இங்குள்ளவர்கள் அவரைப் பாராட்டி வாழ்த்துகிறார்கள்!.

இப்படியே போனால் இனிவருங்காலங்களில் 'எமக்கு நிவாரணம் வழங்க வழிசெய்த அரச அதிபருக்கும், பிரதேச செயலாளருக்கும், கிராம சேவையாளருக்கும், எமக்கு அதனைப் பகிர்ந்து வழங்கிய கிளைமுகாமையாளருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதுடன் அவர்கள் சேவை மேன் மேலும் சிறந்து நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்' - என இப்படியான விளம்பரங்களும் வரலாம்.

இவை மட்டுமா? 'எமக்கு சீருடை வழங்க வழிசெய்த மேலதிக கல்விப் பணிப்பாளர், அதனை எமது வலயத்துக்குக் கொண்டுவந்து சேர்த்த வலயக் கல்விப்பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர் அதனை எமக்குத் தந்த ஆசிரியர் ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.' இப்படியே போனால் பத்திரிகை நிறைந்து போய்விடும்.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே கொழும்புப் பத்திரிகைகளில் இப்படியான விளம்பரங்கள் வருகின்றனவா? அப்படி வந்தாலும் ஆண்டில் ஒன்று, ஆவணியில் ஒன்று வரும். இது இங்கு நாள் தோறும் வந்து வெறுப்பேற்றுகின்றதே? 1500 ரூபா நிவாரணம்பெற வழிசெய்தால் 1,000 ரூபா செலவழித்து விளம்பரம் செய்ய வேண்டுமா? சிலவேளை சம்பந்தப்பட்டவர்களே விளம்பரச் செலவையும் சேர்த்து வழங்குகின்றார்களோ என்று ஐயுறத் தோன்றுகிறது. எல்லாம் அந்த தேவனுக்கே வெளிச்சம்.

றோட்டால் போகும் பிச்சைக்காரனுக்கு ஏதும் கொடுத்தால் அவன் வாழ்த்திவிட்டுப் போவான். ஆனால் இதில் வாங்குபவர்கள் பிச்சைக்காரனும் இல்லை. சம்பந்தப்பட்டவர்கள் பிச்சை கொடுப்பவர்களும் இல்லை. இலங்கையின் 40 இற்கு மேற்பட்ட அமைச்சர்களில் நம்மூர்(?) அமைச்சர்தான் ஏதோ கடமை செய்கின்றார். மற்றவர்கள் என்ன தூங்குகின்றார்களா? எப்படிப் பார்த்தாலும் இதன் மூலம் ஒரே ஒரு தரப்பு இலாபம் அடைகின்றது. அவர்கள் யார் என்பது எல்லோருக்கும் நன்கு புரியும்.

*திருநெல்வேலி,* நக்கீரன்.

# சித்த மருத்துவத்துறை தலைவர் தரும் விளக்கம்

'சித்த மருத்துவமாணவரின் எதிர்காலம் குறித்து சிந்திக்க எவரும் இல்லையா?' என்ற தலைப்பில் 07-08-2001 ஆம் திகதிய 'உதயனில்' வாசகர் திருமுகம் பகுதியில் பிரசுரமான விடயம் குறித்து பின்வருவனவற்றை ஏனையோர் அறிந்துகொள்ளும் வகையில் தெரியப்படுத்துகின்றேன்.

✪ முதலாவதாகப் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்படும் எந்தவொரு கற்கை நெறிக்கும் அது முடிவடைந்ததும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற உத்தரவாதம் வழங்கப்படுவதில்லை. சித்தமருத்துவ கற்கைநெறியும் இதற்கு விதிவிலக்கானதல்ல.

✪ மாணவர்கள் தாம் விரும்பியே இத்துறையைத் தெரிவுசெய்து விண்ணப்பிக்கிறார்கள். பின்னர் நேர்முகப் பரீட்சையின் மூலம் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். இத்துறையில் சேருமாறு விரிவுரையாளர்கள் எவரும் அவர்களை நிர்ப்பந்திப்பதில்லை.

✪ இத்துறையிலிருந்து இதுவரை 10 பி.எஸ்.எம்.எஸ். அணிகள் பட்டம்பெற்று வெளியேறியுள்ளன. 11 ஆவது அணி மாணவரின் இறுதிப்பரீட்சைப் பெறுபேறுகள் 24-07-2001 இல் வெளியாகியுள்ளன. இவர்கள் தமது ஒருவருட மருத்துவ உள்ளகப் பயிற்சியினை கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலையிலும், பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையிலும், நாவின்னை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திலும் பூர்த்திசெய்யவேண்டும்.

✪ மேலும் ஒவ்வொரு அணியிலும் விசேட சித்திபெறுபவர்கள் திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்திலும் நிரந்தர/தற்காலிக விரிவுரையாளர்களாகவும்/செய்முறை காட்டுநர்களாகவும் நியமனம் பெறுகின்றார்கள். இது மாணவரின் கல்வித்திறமையிலும், முயற்சியிலும் முற்றாகத் தங்கியுள்ளது.

✪ இதுவரை 6ஆவது பி.எஸ். எம்.எஸ். அணிவரைக்கும் அரசாங்கத்தில் நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது. 7 ஆவது அணியில் இருவர் அண்மையில் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

✪ மாணவர்கள் இந்த வைத்தியத்துறையைத் தேர்தெடுக்கும் போது நல்ல நோக்குடனேயே தேர்தெடுக்கின்றார்கள் என்று நாம் நம்புகின்றோம். அவர்களுக்கு மருத்துவபோதனையுடன், முக்கியமாக மருத்துவ ஒழுக்கம் என்பனவும் கற்றுக்கொடுக்கின்றது. சில பட்டதாரிகள் தமக்கு கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் அரச நியமனம்பெற வாய்ப்பிருந்தும் கூட தனிப்பட்டமுறையில் வைத்திய சேவை செய்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

✪ மேலும் இத்துறையிலிருந்து வெளியேறிய பட்டதாரிகளில் கணிசமானோர் பட்டதாரி வேலைப் பயிலுநர்களாக அரச சேவையில் சேர்ந்து வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

✪ பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது அரசாங்கத்தின் கொள்கைப்பிரகடனத்தைப் பொறுத்துள்ளது. சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணசபை ஆகியவற்றின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் ஒரு பொது அடிப்படையில் வேலைவாய்ப்புக்கான திட்டங்களை உருவாக்கி மாணவர்களின் எதிர்காலத்தைச் சுபீட்சமானதாகச் செய்தல் வேண்டும். இவ்விடயத்தில் அரசு எமது சித்தமருத்துவத்துறைக்கு தன்னாலான முயற்சிகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

✪ 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து 1984 இல் யாழ்.பல்கலைக் கழகத்துடன் இணைந்துகொண்ட சித்தமருத்துவத்துறை பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் துரிதமாக வளர்ச்சியடைந்து வருவதை எவரும் மறுக்க முடியாது.

*யாழ்ப்பாணம்.*

தலைவர்
சித்த மருத்துவதுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# பொதுக் கிணறுகள் திறந்து வைப்பு

வலி.தெற்கு,ஓக்.19

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இவ்வாரம் ஐந்து பொது-குடிதண்ணீர்க் கிணறுகள் பட்டினிக்கெதிரான நிறுவனத்தினரால், புனரமைப்புச் செய்யப்பட்டு பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மூன்று பொதுக்குடிதண்ணீர்க் கிணறுகளும் இரண்டு விவசாயத்துடன் கூடிய குடிதண்ணீர்க் கிணறுகளும் அளவெட்டி தெற்கு, அளவெட்டி மேற்கு கிராமசேவையாளர் பிரிவுகளில புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தன.

இப்பொதுக் கிணறுகள் திறந்து வைக்கப்பட்டபோது பொதுக் கிணறுகள் பாவனை பற்றிய சுகாதாரப் பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டது.

கிராம சேவையாளர் திருமதி மா.மதிவதனன், பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ்.முருகானந்தம், பட்டினிக்கெதிரான நிறுவன திட்ட உத்தியோகத்தர் க.இராசேந்திரம் ஆகியோர் இவ்வகுப்பில் கருத்துரை வழங்கினர்.

பயிற்சி முடிவில் பாவனையாளர்களுக்கு பொதுக்கிணறு பாவனை பற்றிய கைந்நூல் ஒன்றும் பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்பட்டது. (ஐ-152)


உ

ஸ்ரீ துர்க்காதேவி துணை





## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை (இலங்கை)

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2001

20-08-2001 முதல் 31-08-2001 வரை

"மூவர்க்கும் முதற்பொருளாய் மூத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனத்துக்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்குவாம்"

துர்க்கை அம்பாள் அடியார்களே!

நிகழும் விஷு ஆண்டு ஆவணித்திங்கள் 4ஆம் நாள் (20-08-2001) திங்கட்கிழமை பூர்வ பட்சமும் பூரநட்சத்திரமும் கூடிய நல்லோரையில் முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்ற வைபவம் நடைபெறத் திருவருள் வாய்க்கப்பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மஹோற்சவம் நடைபெற்று பூர்த்தி தினமாகிய ஆவணித் திருவோணத்தில் 'துர்க்கா புஷ்கரணி' தீர்த்தத் தடாகத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறவும் அம்பாள் கருணை பாலித்துள்ளார். இம் மஹோற்சவ காலங்களில் அம்பாள் அடியார்கள் விரதமனுஷ்டித்து ஆலயத்துக்கு வருகை தந்து அம்பாளை வழிபாடு செய்து உய்தி அடைய வேண்டும் என்று அன்பாக வேண்டுகிறோம்.

### பிரதான உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | : | ஆவணி 04ஆம் நாள் (20-08-2001) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணி |
| வேட்டைத் திருவிழா | : | ஆவணி 12ஆம் நாள் (28-08-2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணி |
| சப்பறத் திருவிழா | : | ஆவணி 13ஆம் நாள் (29-08-2001) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி |
| தேர்த் திருவிழா | : | ஆவணி 14ஆம் நாள் (30-08-2001) வியாழக்கிழமை காலை 9.00 மணி |
| தீர்த்தத் திருவிழா (ஆவணி ஓணம்), கொடியிறக்கம் | } | ஆவணி 15ஆம் நாள் (31-08-2001) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி |

பிராயச்சித்த அபிஷேகம், வைரவர் சுவாமி பொங்கல்: ஆவணி 16ஆம் நாள் (01-09-2001) சனிக்கிழமை.

### மஹோற்சவகால பூசைநேர ஒழுங்குகள்

| முற்பகல் | பிற்பகல் |
|---|---|
| காலை 7.00 மணி - பூசை | பிற்பகல் 3.00 மணி - சாயரட்சைப் பூசை |
| காலை 8.00 மணி - ஸ்நபன அபிஷேகம் | பிற்பகல் 3.30 மணி - ஸ்தம்பபூசை |
| காலை 9.00 மணி - விஷேடபூசை | பிற்பகல் 4.30 மணி - வசந்தமண்டபப் பூசையும், அம்பாள் திருவீதியுலாவும் |
| காலை 9.30 மணி - ஸ்தம்ப பூசை | மாலை 6.30 மணி - அர்த்தஜாமப் பூசை. |
| முற்பகல் 10.30 மணி - கூட்டுவழிபாடு | |
| முற்பகல் 10.45 மணி - வசந்தமண்டபப் பூசையும், திருவீதியுலாவும் | |

### முக்கிய குறிப்புகள்


1. கொடியேற்றம், கொடியிறக்கம் பொது உபயமாக நடைபெறுவது வழக்கமாகையால் இவ்வுபயத்துக்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவோர் நிதி அலுவலகத்தில் பணத்தைச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. பணமாகவோ, பண்டமாகவோ, அரிசி முதலிய அன்னதானப் பொருள்களாகவோ அல்லது பூசை உபகரணங்களாகவோ அன்பளிப்புச் செய்வோர் அனைவரும் நிதி அலுவலகத்தில் பதிவு செய்து பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். கோயில் நிர்வாகம் தவிர்ந்த எவருக்கும் கோயில் பேரில் அன்பளிப்புப்பெற அனுமதி வழங்கப்படவில்லை. எந்த அன்பளிப்பும் கோயில் அலுவலகத்திலேயே செலுத்தப்பட வேண்டும். அல்லது கடிதமூலமோ, வங்கி மூலமோ கோயிலுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
3. கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி எடுத்தல், அடி அழித்தல், அங்கப்பிரதிட்டை பண்ணல் யாவும் வெளிவீதியில் நடைபெறவேண்டும். திருவிழாக் காலங்களில் பொங்கிப்படைத்தல் மற்றும் நேர்த்திகள், திருமணம், தனிப்பட்ட அபிஷேகம் ஆகியவை இடம்பெறாது என்பதை அறியத்தருகின்றோம்.
4. பெண்களும் குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவு குறைத்துக் கொள்ளுதல் விரும்பத்தக்கது.
5. சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறாக உடைகள் அணிந்து வருதல் தவிர்க்கப்படல் வேண்டும்.
6. கோயிற் தரிசனம் முடிந்தவுடன் அவரவர் தத்தம் இல்லங்களுக்குச் சென்றுவிடுவது விரும்பத்தக்கது. இரவு நேரங்களில் எவரும் கோயில் வீதிகளில் தங்குவதோ பொழுது போக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.

தேவஸ்தான கணக்கு உள்ள வங்கிகள் : இலங்கை வங்கி, சுன்னாகம் க/கு இல.3155
வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம் க/கு இல. 12612
இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி க/கு இல. 0037-02-0000397-4

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

தெல்லிப்பழை. (C/17914)


## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்



(இன்று இருபத்தாறாம் திருவிழா - பூங்காவனம்)

### பொன்னுருக்க வாறாய்!

தாலிகட்டி பவனிவரும் தங்கமயில் வேலா - உந்தன்
தாளடியில் கொண்ட நேசம் சாய்ந்துவிடுந்தாவா!

கன்னிகா தானஞ் செய்துன் கையில் கொடுத்தார்கள் - வள்ளி
கள்ளி தெய்வ யானையையுன் கண்ணுள் பதித்தார்கள்
பால்பழமும் தீத்தியே ஆலாத்தி எடுத்தார்கள் - தலைப்
பாகையுடன் புன்னகைத்தாய்; மையலுற்றோம் நாங்கள்
ஊஞ்சலிலே ஆடுகின்றாய்; ஊடல் புரிகின்றாய் - பின்னர்
உன்துணைகளோடு பேசி உள்ளங் குளிர்கின்றாய்
பூங்காவன நாளிற் புதுத் தெம்பில் மிதக்கின்றாய் - நாமும்
பூப்படைந்து காத்திருக்கோம்: பொன்னுருக்க வாறாய்

தேவியரை மட்டுங்கொஞ்சி எம்மைவிடல் நன்றோ - உன்தன்
தெய்வமுத்தம் எம்இதழைத் தீண்டுந் தினம் என்றோ?
கூவி அழைக்கின்ற குரல் கேட்கவில்லை இன்றோ? - வாழ்வில்
குத்து விளக்கேற்றி எம்மைக் கூடு; துயர் உண்டோ!

- த.ஜெயசீலன்

### ஏறிவா மயிலின் மீது!

நல்லை உறை முருகா நாம் உனைக் கேட்பதெல்லாம்
வல்வினையால் தினம் தினம் வருந்தி மாள்குகின்றோம்
தொல்லை தவிர்த்திடவே துடுக்குடன் காத்திடவே
எல்லையில் கருணைக் கடல் ஏறிவா மயிலின் மீது!

சண்டை ஒழிய சமரசம் தழைக்க சன்மார்க்கம் பரவ
தண்டை ஒலிக்கவள்ளி தேவயானை சகிதம் மக்களின்
கொண்ட கொள்கை நிலைக்க குமுறும் எரிமலை நிற்க
பண்டு பெருமை நிலைக்கப் பறந்துவா மயிலின் மீது!

கீழ்கரவை செல்லையா - வல்லிபுரம்.

### தோகைமயில் மீதுவந்து அருளுவாய்!

நல்லைநகர் தனிலுறையும் தெய்வமே
நாடிவந்து உனை வணங்கி உய்வமே
எல்லையிலாத் துன்பமோடு வாழவோ
ஏற்றமோடு வாழ்ந்தஇனம் மாளவோ
வல்லசுரர் அழிக்கவந்த சண்முகா
வடிவேலைத் தாங்கியருள் தருமுருகா
தொல்லையினி இல்லையென வாழவே
தோகைமயில் மீதுவந்து அருளுவாய்!

- நயினை இராகுலன்

### திருமணம் காண்பான்!

நாத ஒலியில் திசைகள் முழங்கிட
நான்கு தமிழும் இசைகள் வழங்கிட
வேத நெறி மொழிகள் குவித்திட
வள்ளி தெய்வானை விழிகள் சிவந்திட
தென்றல் குலுங்கிட நல்லை முருகன்,
திரைகள் விலகிடத் திருமணம் காண்பான்
வென்ற கைகள் மாங்கல்யம் பூட்ட
வீதி சுற்றியே பூங்காவனம் நடத்துவான்

- நெல்லை மகேஸ்வரி

### கந்தா இறந்தபின் தான் சுதந்திரமா?

நாவிலும் போற்றும் நல்லூரில்
நல்லருள் காட்டிடும் கந்தா!
கயவர் கூட்டம் கூத்தாடும்
கட்டாந் தரையில் கலக்கமா!

நாமார்க்கும் குடியானோம் அடங்கியே
கமக்கட்டில் சால்வை வைத்தேசரண்
பிறந்தோம் தென்மராட்சி, புகுந்தோம் வடவலி
இறந்தேயுன் காலடியில் காண்போமா சுதந்திரம்

- செ.க.துரைரத்தினம்

# யாழ். படைத் தளபதியாக மேஜர் ஜெனரல் விஜேசூரிய

கொழும்பு ஓக. 19

யாழ். மாவட்ட இராணுவத்தளபதியாக மேஜர் ஜெனரல் டி. எஸ். கே. விஜேசூரிய கடந்த வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதுவரை யாழ். தளபதியாகப் பதவிவகித்த மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால ஒருவருட பயிற்சிக்காக சீனா செல்லவிருப்பதை அடுத்தே அவரது இடத்துக்கு விஜேசூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்மராட்சியில் கடந்த ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்ட 'அக்கினிச்சுவாலை, படை நடவடிக்கை பெரும் தோல்வியில் முடிந்ததை அடுத்து அப்போதைய யாழ். மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டு அவரது இடத்துக்கு மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால நியமிக்கப்பட்டிருந்தார். (ஐ)

## படையினரால் விவரங்கள் பதிவு

சண்டிலிப்பாய், ஓக. 19

பண்டத்தரிப்புப் பகுதியிலுள்ள கடைகளிலும், வீடுகளிலும் உள்ளவர்களின் விவரங்கள் பாதுகாப்பு படையினரால் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் இப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு வந்த இராணுவத்தினர் குடும்பப் பதிவுப் பத்திரத்தைப் பரிசோதித்ததுடன் தேசிய அடையாள அட்டை, இராணுவ அடையாள அட்டை ஆகியவற்றையும் பரிசோதித்தனர். (ம–135)

# தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய உற்சவம் நாளை

வலி. தெற்கு, ஓக. 19

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

ஆலய உற்சவத்தையொட்டி யாழ். பேருந்து நிலையத்தில் இருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரும் தனியார் பேருந்து சேவையினரும் பஸ் சேவைகளை ஏற்பாடு செய்துள்ளனர்.

(ம–86)

# பக்திபூர்வமாக நடந்தேறிய நல்லூர் தீர்த்தோற்சவம்

வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் தீர்த்தோற்சவம் நேற்றுக் காலை 7 மணிக்கு மிகவும் பக்திபூர்வமாக நடந்தேறியது.

இந்த உற்சவத்தில் குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

கடந்த இரண்டு வருடங்கள் இடம்பெற்றது போன்று இம்முறை விமானப்படையினரின் ஹெலி தீர்த்தக்கேணியில் பூமாரி பொழியவில்லை.

(ம–10)

# நல்லூர் ஆலயச் சூழலில்

# தவறவிட்ட பொருள்களை அடையாளம் காட்டிப் பெறலாம்

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் கந்தசுவாமி ஆலய சுற்றாடலில் அடியார்களால் தவறவிடப்பட்ட பொருள்களை இந்து விடுதியில் அமைந்துள்ள உற்சவகாலப் பணிமனையில் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மஹோற்சவம் ஆரம்பமாகிய நாள்களில் இருந்து இதுவரை அடியார்களால் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள், மணிக்கூடுகள், சைக்கிள் திறப்புகள், தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும்—

உரியவர்கள் தமது பொருள்களை அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறும் பணிமனையின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தினத்துக்குப் பின்பு சகல பொருள்களும் மாநகரசபை அலுவலகத்தில் கையளிக்கப்படவுள்ளதாகவும் உரியவர்கள் பின்னர் அங்கு சென்று அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

மஹோற்சவ நாள்களில் பல திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ள போதும் திருடர்களில் ஒருவர் மட்டுமே கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு எச்சரிக்கையின் பின்பு விடுவிக்கப்பட்டதாகவும் பல அடியவர்கள், தங்களின் தங்க ஆபரணங்களைப் பறி கொடுத்துள்ளதாகவும் அந்தஅதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ஐ–10)

## மிதிவெடியில் சிக்கி காயம்

ஏழாலை ஏழு கோயிலடிப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது இடது காலின் கீழ்ப்பகுதியை இழந்து படுகாயமடைந்தார்.

குணசேகரம் கஜீரன் (வயது 19) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். இவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம–9–15)

## புதிய சிற்பத்தேர் திருப்பணி ஆரம்பம்

கல்வியங்காடு அருள்மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் ஆலயத்துக்கான புதிய சித்திரத் தேர் திருப்பணி ஆரம்ப வைபவம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.05 மணி முதல் 1.35 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

திருநெல்வேலி விநாயகர் சிற்பாலய ஸ்தபதி சு. இராசரெத்தினம் சிற்பத் தேரை நிர்மாணிக்கவுள்ளார்.

(ஐ–7)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 19

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை ஒட்டி ஆலயச் சூழலில் தினமும் நடைபெற்று வரும் நிகழ்வுகளில் பூங்காவனத் திருவிழாவான இன்று நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் மாலை 6 மணிக்கு துர்க்காமணி மண்டபத்தில் இடம்பெறும். தெய்வீக இசையரங்கில் வி. சிவஞானசேகரத்தின் பாட்டு.

★ ★ ★

நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் மாலை 6 மணிக்கு கானகதாவாரிதி பிரம்ம ஸ்ரீவை. நித்தியானந்த சர்மாவின் கந்தபுராணச் சொற்பொழிவில் 'கும்பகர்ணன்'.

★ ★ ★

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் பிற்பகல் 2 மணிமுதல் இடம்பெறும் திருமுறைப் பாராயணம், சொற்பொழிவுத் தொடரில் —

அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் 'கவிமணி' சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனின் 'கந்தன் கருணை' என்ற தலைப்பிலான நற்சிந்தனையும் —

மாலை 6 மணிக்கு யாழ். நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினரின் 'வள்ளி திருமணம்' வில்லுப் பாட்டும் இடம்பெறும்.

★ ★ ★

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அதிகாலை 5 மணிமுதல் திருமுறை வீதிப் பஜனை, குருமூர்த்தி ஆலயதில் காலை 7 மணிக்கு விசேட பூஜை, காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரையும், பிற்பகல் 3.00 மணி முதல் 4.30 மணிவரையும் 'கந்தபுராணம்' புராண படனம் ஆகியன இடம்பெறும்.

(ஐ–7–86)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், ஓக. 19

இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கலாஜோதி விளையாட்டு மைதானத்தில் நிலையத் தலைவர் மா. ஜெயசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலி. தெற்குப் பிரதேச சபைத் தலைவர் கே. கமலசேகரமும் சிறப்பு விருந்தினராக இணுவில் மத்திய கல்லூரி அதிபர் துரை எங்கரசு, வலி. தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ. அரிகரன், வலி. தெற்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் த. தேவராஜன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஐ–4)

# இராணுவச்சீருடை வைத்திருந்த வர்த்தகர் கொடிகாமத்தில் கைது

## தேடுதல் நடத்தியபோது சம்பவம்

கொடிகாமம் நகர்ப் பகுதியை சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய பொலீஸார் அங்குள்ள பலசரக்குக் கடையொன்றில் இருந்து இராணுவச் சீருடை ஒன்றையும் ஜாக்கட் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர், 17 லீற்றர் பெற்றோல், 3 லீற்றர் டீஸல், 3 லீற்றர் ஒயில் ஆகியவற்றுடன் 50 ஆயிரத்து 500ரூபா பணத்தினையும் கைப்பற்றினர். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

மேற்படி பொருள்கள் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி கடையின் உரிமையாளரை கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் படையினரால் மலிவு விலையில் விற்கப்பட்டபோது பெற்றோல், டீஸல், ஒயில் ஆகியவற்றை வாங்கி தமது சொந்தத் தேவைக்காக வைத்திருந்ததாகவும் —

கைப்பற்றப்பட்ட பணம் தனது வியாபாரப் பணம் எனவும் —

கடந்த 15 தினங்களுக்கு முன்னர் தனது கடைக்கு வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் 4 சிகரட் பைக்கற், நெல்லிரசப்போத்தல் ஒன்று, சோப் இரண்டு என்பன உட்பட 750 ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்ததாகவும்—

பணத்தினை விட்டு வந்ததாகக் கூறி சீருடையைக் கடையில் வைத்துக்கொள்ளுமாறும் பணம் தந்துவிட்டு எடுத்துச் செல்வதாகவும் கூறி சிகரட் பைக்கற்றுக்களை மட்டும் எடுத்துச் சென்றுவிட்டதாகவும்—

மாலை வரை அவர் வராததால் அவற்றினைக் கடையினுள் எடுத்து வைத்திருந்ததாகவும்—

சந்தேகநபர் நீதிவானுக்குத் தெரிவித்தார்.

வியாபாரத்தை வெறுமனே பணம் கருதி நடத்தவேண்டாமெனவும் புத்திசாதுரியமாக நடக்குமாறு சந்தேகநபரைக் கடுமையாக அறிவுறுத்திய நீதிவான் அவரை 5 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் இரண்டு ஆட்பிணையிலும் செல்ல அனுமதி அளித்தார். (ம–117)

## நுணாவிலில் பொலீஸ் நிலையம்

சாவகச்சேரி பிரிவுக்கான பொலீஸ் நிலையம் நுணாவிலில் உள்ள வீடொன்றில் அமைக்கப்படவுள்ளது.

பிரதேச மக்கள் தமக்கு ஏற்பட்ட சொத்து இழப்பு தொடர்பான பொலீஸ் பதிவு அறிக்கை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கியதையடுத்து நுணாவிலில் பொலீஸ் நிலையம் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம–119)

## சமய சந்நிதிகளில்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறு நாள் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை பிரசங்க பூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தும் சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

★ ★ ★

நீர்வேலி பரலோகமாதா ஆலயத்தின் திருவிழா திருப்பலி இன்று காலை 7.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப சுற்றுப் பவனியும் இடம்பெறவுள்ளது. (ம–6)


குப்பிழான்

கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய

## பொதுக்கூட்ட அறிவித்தல்

நாளை (20.08.2001) திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் ஆலய முன்றிலில் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெறும் என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றோம். தவறாது சமுகந் தரவும்,

க. சின்னராசா (தலைவர்) (91342) தி. சசீதரன் (செயலாளர்)



## கூறுவிலை கோரல்

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் கரம்பகம் தோட்டத்தில் பறிக்கப்பட்ட தேங்காய்கள் நாளை (20.08.2001) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் 10.00 மணிக்குமிடையில் அல்வாயில் உள்ள சபையின் தற்காலிக அலுவலகத்தில் கூறுவிலைகள் மூலம் வழங்கப்படவுள்ளன.

★ கூறுவிலைக்கான கேள்விப் பத்திரம் அலுவலகத்தில் வழங்கப்படும்.

பொறுப்பதிகாரி

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபை,
பளைப் பிரதேசம்.

(சி/17930)


## மரண அறிவித்தல்

### திருமதி பிரான்சிஸ் லூர்த்தம்மா

யாழ்ப்பாணம் டேவிற் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ் லூர்த்தம்மா நேற்று (18-08-2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் விசேந்தி பிரான்சிஸின் (ஓய்வூதியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செபதேயு — செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் றோஸ் இமல்டா (பபி), மேரிகொறற்றா (யோகம்), டக்ளஸ் (கனடா), பெனிற்றா (சாந்தி, கொன்வென்ட்), லெனிற்றா (வசந்தி), டிரூட்ஸ் பாபு (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிறிஸ்ரி இராசநாயகம் (சலூதி), டொமினிக் (ஜெயரெட்ணம்), வரவேரனிக்கா (கனடா), யோசப் கிறிஸ்ரி (கொன்வென்ட்) ஆகியோரின் அன்பு மாமியாரும் லெற்றீசியா தயாழினி, பற்றீசியா ஜெயந்தினி, டிலஸ்ருக்ஷன், கிஷாந்தா சுஜின் (மாணவி, யா/திருக்குடும்ப க. மடம்), ஜொனிக்கியோமன் (மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றெக்ஸ்சியா, றொமிசிந்தியா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

டொமினிக் ஜெயரெட்ணம் (மருமகன்)

33, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

(91347)

## நேற்று சில்லாலையில் தேடுதல்

சில்லாலை, சாந்தை ஆகிய பகுதிகள் நேற்று அதிகாலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தீவிர தேடுதல் நடத்தப்பட்டது. வீடு வீடாக நடத்தப்பட்ட இத் தேடுதலின் போது குடும்பப் பதிவுப் படிவம் அடையாள அட்டைகள் என்பன தீவிரமாகப் பரிசோதிக்கப்பட்டன. (ஐ-135)


## பாராட்டி நன்றி கூறுகின்றோம்

**புளியங்கியான் பிள்ளையார் ஆலயத்தின்**

திருப்பணி திருத்த வேலைகளுக்காக நிதி உதவி வழங்கிய



*வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து சமய கலாசார*

அமைச்சர் மாண்புமிகு

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

*அவர்களுக்கும்*



*யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய*

கௌரவ

**கே.வி.குகேந்திரன்** (ஜெகன்)

*அவர்களுக்கும்*



*பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமாகிய*

உயர்திரு.

**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்** (ரங்கன்)

*அவர்களுக்கும்*

*பருத்தித்துறை பிரதேச சபை உபதலைவரான*

உயர்திரு.

**பரஞ்சோதி ரவீந்திரன்** (ராசிக்)

*அவர்களுக்கும்*

எமது ஆலய வளர்ச்சியில் அக்கறை கொண்டு நிதி வழங்கியமைக்காகப் பாராட்டி வாழ்த்துக்கூறி, எமது உளங் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை
புளியங்கியான் பிள்ளையார் ஆலயம்

*துன்னாலை கிழக்கு, கரவெட்டி.* (C/17923)


## சந்நிதிக் கந்தன் மஹோற்சவம் இன்று ஆரம்பம்

வடமராட்சி,ஓக.19

பிரசித்திபெற்ற தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம் பெறும் மஹோற்சவத்தின் முக்கிய உற்சவங்களான பூங்காவன உற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட் கிழமை பகல் 9 மணிக்கும், கைலாச வாகன உற்சவம் மறுநாள் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கும் சப்பறத்திருவிழா 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவும் நடைபெறும்.

இரதோற்சவம் அடுத்த மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கும் தீர்த்தோற்சவம் அடுத்தநாள் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறுவதுடன் மஹோற்சவம் நிறைவுபெறும். (ஐ-173)




## பிறந்த நாள் வாழ்த்து

*19-08-2001*

**பொன்.வெற்றிவேல்**

(சட்டத்தரணி)

வெற்றிவேல் என்னும் எங்கள்
விழுமிய சட்டத்தரணி யாரும்
பெற்றனர் வயது எழுபத்தொன்று
பெருமிதம் அடைகின்றோம் யாம்
உற்றநல் நண்ப நீயும் உதயநல் சூரியன்போல்
பெற்றன நிறைய இன்பம் பெறுக நீ மேலும் மேலும்

(91339) - சக சட்டத்தரணிகள்.



## வாழ்த்துகின்றோம்



எமது சபையின் தலைவர்,
சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு
***சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர்***
(J.P.) அவர்களும்



எமது சபையின் மூத்த உறுப்பினர்
***சிவஸ்ரீ இரத்தினசாமிக் குருக்கள்***
அவர்களும்

18.08.2001, 19.08.2001 (நேற்றும் இன்றும்) ஆகிய திகதிகளில் கனடா ரொறண்டோ நகரில் நடைபெறுகின்ற "இளைய சமுதாயத்தை உருவாக்குவதில் இந்து சமய சேவைகள்" எனும் சர்வதேச கருத்தரங்கில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வதற்காக கனடா சென்றுள்ளனர். இவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(91333) அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை



# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் குணசிங்கம் ஞானேந்திரன் (கண்ணன்)

(உரிமையாளர் - கோபிகா ஆடையகம்)



*தோற்றம்*
07 – 01 – 1977

*மறைவு*
01 – 09 – 1999

*திதி:*
19–08–2001

காற்றினிலே கலந்த
உன் உயிர் மூச்சு - இன்னும்
எம் நெஞ்சினிலே
வீற்றிருந்து வீசுகிறது!

உன்வாசமிட்ட
வார்த்தைகள் மட்டுமே - எங்கள்
வீட்டு விலாசமாகிப் போனது!

நீ பதித்துச்சென்ற
பாதச்சுவடுகள் - இன்று
எங்கள் பாதையாகிவிட்டது!

உன்னில் நிலைத்து வாழ்கின்றோம்
உன்னை
நினைத்துத் தவிக்கின்றோம்!

நேற்றுனக்கு
இட்ட தீயினில் - இன்னும்
எரிந்து கொண்டிருக்கின்றோம்!

ஆற்ற முனைகின்ற
ஆறுதலெல்லாம் - கண்ணா
ஆறாய் கடலாய் வேதனையாய்
அடித்துச் செல்லத் தவிக்கின்றோம்!

கந்தன் கால்பதித்த வீதிகளில்
உன் மேல்பதித்தாய் -
உயிர் துறந்தாய் - வேலவன்


வேலுள்ள காலமளவும் - கண்ணா
உன் பேர் வாழும்!
உன் பேர் வாழும்!!

*158/1, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.*

(C/17925)

அம்மா, அப்பா, சகோதரிமார்
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

# நன்றி நவில்கின்றோம்



போற்றிப் பாடடி பெண்ணே.....!
தேவர் காலடி மண்ணே!!

அமரர்

## பொ.சங்கரப்பிள்ளை J.P.

(முன்னாள் அதிபர் - யா/உடுத்துறை மகா வித்தியாலயம், தலைவர் - வடமராட்சி கிழக்கு ஓய்வூதியம் பெறுவோர் சங்கம், மருதங்கேணி கிராமிய அரசினர் வைத்தியசாலை - அபிவிருத்திச் சங்கம், உபதலைவர் - வடமராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம், நிர்வாக அங்கத்தவர் - பளை லயன்ஸ் கழகம், நீண்டகால நெறியாளர் - பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

உதயம்: 01-07-1938 அஸ்தமனம்: 11-08-2001

எங்கள் சூரியத் தேவனின் அஸ்தமனத்தின் பொழுது விழிநீர் சொரிந்து அஞ்சலி செலுத்திய எமது வடமராட்சி கிழக்கு வாழ் மக்கள் அனைவருக்கும், கடந்த பதினெட்டு ஆண்டுகளாக நான் ஐரோப்பியா புகுந்து வாழ்வதால் என் முகம் தெரியாத என் சொந்தங்களுக்கும், எனது அப்பாவின் நண்பர்களுக்கும், அப்பாவின் விருட்சங்களாக இன்று பூத்துக் குலுங்கி, காய்த்து உயர்ந்து நிற்கும் வடமராட்சி கிழக்கு மாணவர் சமூகத்தினருக்கும், அப்பாவின் பொதுச் சேவைகளில் தோளோடு தோள்நின்று பணியாற்றிய அப்பாவின் இதய நண்பர்கள், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர், உத்தியோகத்தர்கள், வடமராட்சி, தென்மராட்சி கல்விப்பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகப் பெருந்தகைகள், வணிகப் பெருமக்கள், தொழிலாளர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட ஸ்தாபனங்களுக்கும், எனக்காக வந்து கண்ணீர் அஞ்சலி செலுத்திய கரவெட்டி மேற்கு வாழ் என் உறவினர்கள் அனைவருக்கும், கடந்த 12ஆம் திகதி மாலை ஆனைவிழுந்தான் மயானம் நோக்கி நடந்த இறுதியாத்திரையில் எங்கள் மன்னவனை ஒரு பிடி சாம்பலாக்கி கொள்ளிக்குடம் சுமந்த இந்தக் கர்ணனுடன் கால்தடம் பதித்த அனைத்து நெஞ்சங்களுக்கும் என் அப்பாவின் சார்பில் என் நன்றிப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

*ஆச்சி துணை,*
*(சம்பந்தர்கடை அருகில்)*
*கரவெட்டி மேற்கு,*
*கரவெட்டி.*

சிரேஷ்ட புத்திரன்
சங்கரப்பிள்ளை புஸ்பகுமார்.
சிரேஷ்ட மருமகள்
திருமதி அம்மன்கிளி புஸ்பகுமார்.

(C/17924)

## கணவன் மனைவி சண்டை கத்திவெட்டில் முடிந்தது

யாழ்ப்பாணம்,ஓக.19

கணவன் மனைவிக்கிடையில் இடம்பெற்ற தகராறு கத்திவெட்டில் முடிந்ததில் இருவர் காயமடைந்தனர்.

தொல்புரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கணவனின் கத்திவெட்டுக்கிலக்காகி மனைவியும் அவரது சகோதரனும் காயமடைந்தனர். இருவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ம-15)

## பங்கீட்டு அட்டைக்கு மா

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் பங்கீட்டு அட்டைக்கு தலா 5 கிலோ மா வழங்கப்பட்டு வருவதாக சங்கப் பொதுமுகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார். (ம-117)

## தளபாட கொள்வனவுக்கு நிதி உதவி

பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் உயர்தர பெண்கள் பாடசாலைக்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கென ஒரு லட்சத்து 70ஆயிரம் ரூபாவினை வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.(ம-117)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஓக.19

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நவாலி நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில், இன்று ஞாயிற்றுக கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

சுழிபுரம் விக்டோரியன்ஸ் வி.க. எதிர் அராலி கிழக்கு அண்ணா வி.க. (ம-86)

BIT
Bachelor of Information Technology
University of Colombo
விரிவுரைகள் ஆரம்பம்
யாழ்.மாவட்டத்தில் இருந்து கல்வியாண்டு 2001/2002 BIT கணனி பட்டக்கல்விக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கான விரிவுரைகள் இன்று 19.08.2001 நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகும் என்பதை அறியத்தருகின்றோம்.
மேலதிக விபரம் நாளைய உதயனில்...
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(C/17928)

புலமைப்பரிசில் - 2002
இன்று எமது சகல பரீட்சை நிலையங்களிலும் முதலாவது பரீட்சை ஆரம்பமாகின்றது.
வினாத்தாள்கள் தேவைப் படுவோர் உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
BOND
யாழ் நகர். (91341)

லஷ்சுமி இணுவில்
கடைசி வெற்றி வாரமாக
M.G.R., லதா நடிப்பில்
உரிமைக்குரல்
தினசரி 10.30, 2.30 (ப.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
10.30, 2.00, 5.00 (ப.நே.)
(91338)

நாகம்ஸ் சுன்னாகம்
வேணு, ரோஜா (இரட்டை வேடம்)
நடித்த
கோட்டை அம்மன்
(ரீல்ஸ்)
பேய்களின் அட்டகாசம் நிறைந்த படம்
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91334)

ராஜா யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய்,
தேவயானி, சூர்யா,
நடிப்பில
பிரண்ட்ஸ்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
22-08-2001 முதல்
முதலமைச்சர் ஜெயந்தி
(C/17875)

# வாழ்த்துகின்றோம்

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின்
கட்டட வேலைப் பகுதி தொழில்நுட்ப உத்தியோகத்தர்

## திரு.த.இரவீந்திரதாஸ்

அவர்கள். தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேவை வகுப்பு I இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரின் தன்னலமற்ற சேவை மேலும் தொடர, அவருக்கு எல்லா நலன்களையும் நல்கவேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள்,
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்,
யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை,
(91340) யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்.

# பயிலுநர்கள் தேவை

சுன்னாகத்தில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் மூக்குக் கண்ணாடி அகத்திற்கு (பல்கட்டுதல் உட்பட) பயிலுநர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுன்னாகம் பட்டினசபை எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

*விண்ணப்ப முடிவு:* 27-08-2001
*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:*
சேது விபுலானந்தர் (சூட்டி மாஸ்டர்)
(91345) 207, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

# விண்ணப்ப முடிவு திகதி மாற்றம்

17-08-2001 திகதிய 'உதயன்' பத்திரிகையில் 9ஆம் பக்கத்தில் வெளிவந்த அச்சக தமிழ் எழுத்துக்கள் தேவைக்கான விளம்பரத்தின் விண்ணப்ப முடிவுதிகதி 25-08-2001 என மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

- மாவட்டச் செயலாளர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
வீரசிங்கம் கட்டடத்தொகுதி 2ஆம் மாடி,
இல.12,கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (C/17922)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1944 . 05 . 29



விண்ணில் 2001 . 07 . 20

## அமரர் ஜோ.ச.சத்தியநாதன்

(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர், பனை அபிவிருத்திச் சபை)

*வழிகாட்டியாய் விளங்கிய எங்கள் கலங்கரை விளக்கை*
*அலை கடலின் படகாய் தேடுகிறோம் நாம்*
*நொந்த எம் மனதைத் தேற்றி ஆறுதல் கொள்ள*
*வந்தொருமுறை வழிகாட்ட மாட்டாயா?*
*ஆவலோடு காத்திருக்கிறோம் அப்பாவே!*

நாளை (20.08.2001) திங்கட்கிழமை காலை 10மணிக்கு ஆரம்பமாகும் எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்தி ஆராதனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*'மடத்துக்கடவை'*
*அல்வாய் மேற்கு,*
*அல்வாய்.*

மனைவி - ச.அன்னலட்சுமி.
(91346) மகன் - ச.சத்தியராஜன்.

# மரண அறிவித்தல்

## திருமதி யோகலட்சுமி சரவணமுத்து

கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி யோகலட்சுமி சரவணமுத்து நேற்று (18.08.2001) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் ஊரெழுவைச் சேர்ந்த சின்னத்துரை சரவணமுத்துவின் (C.T.B., கோண்டாவில்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான க.இராசேந்திரம், ந.செல்வலட்சுமி மற்றும் கணேசலிங்கம், சுந்தரலிங்கம், மனோகராதேவி ஆகியோரின் சகோதரியும் நவநீதன் (யா/மத்திய கல்லூரி), நிருபா (வேம்படி மகளிர் கல்லூரி), பிரியா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*G.P.S. வீதி,*
*கல்வியங்காடு.*

(91337)

தகவல்:
சி.சரவணமுத்து
(கணவர்)

# குற்றச்சாட்டுகளை மறுத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் எனக்கும், இரு பிற மூத்த அதிகாரிகளுக்கும் எதிராகத் தங்களால் எழுப்பப்பட்டுள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு கடும் ஆட்சேபனை தெரிவிக்கின்றேன்.

தொடரும் பிரிவினைவாத யுத்தத்தின் முக்கிய கட்டத்தில் முழு மூச்சாக இயங்கிக் கொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினரின் மனோநிலையை சிதறடிக்கவும் எங்களைச் சிறுமைப்படுத்தவுமே இத்தகைய செய்திகள் வழிசெய்யும்.

சர்ச்சைக்குரிய இராணுவ ஆயுதங்கள் குறித்து செய்திகளை வெளியிடும்போது அவதானமாகச் செயற்படும்படி சம்பந்தப்பட்ட செய்தியாளரை இராணுவப் பேச்சாளர் எழுத்து மூலம் வேண்டிக்கொண்டார். எனினும் சம்பந்தப்பட்ட செய்தியாளர் அதற்கு செவிசாய்க்காமை வேதனையைத் தருகிறது.

விடுதலைப் புலிகளுக்கு இத்தகவல் ...யவரட்டும் என்ற காரணத்திற்...வே அவர் அந்த வேண்டுகோளை அலட்சியப்படுத்தினார் என்பது இப்போது ...தெளிவாகிவிட்டது.

நாம் எதிர்பார்த்தது போல உங்களது செய்தியை ...டையாக வைத்து புலிகளின் ... நெற்றில் புலிகள் பதில் தந்துள்ளனர்.

விஷமத்தனமானதும் துர்நோக்கமுடையதுமான அவர்களது தற்போதைய பிரசாரத்திற்கு தூபம் போடும் விதத்தில் நீங்கள் உதவி புரிந்துள்ளீர்கள். இத்தகைய அவர்களது பிரசாரத்துக்கு தகுந்த பதிலடி காலகதியில் வழங்கப்படும்.

உங்களது செயற்பாடு எமது படையினரின் வாழ்வை மட்டுமன்றி மக்களின் வாழ்வையும் நாட்டின் தேசியப் பாதுகாப்பையும் பாதிப்படையச் செய்யும் என்பதை நான் கூறவேண்டுமா?

தங்களது பத்திரிகை தெரிவித்த குற்றச்சாட்டுகள் எவ்வளவு சின்னத்தனமானவையாக இருந்தாலும் அவை குறித்து விசாரணைகளை முடுக்கிவிடுமாறு லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான நிரந்தர ஆணைக்குழுவிடமும் பாதுகாப்பு அமைச்சிடமும் நான் கேட்டுள்ளேன். தங்கள் தரப்பில் சாட்சியம் ஏதும் இருப்பின் விசாரணையாளர்களிடம் அதனை சமர்ப்பியுங்கள்.

பொதுவாழ்வில் உள்ளவர்களின் பெயருக்கு மாசு கற்பிக்கும் - வேறு நோக்கங்களுடன் கூடிய - எண்ணத்துடன் தங்கள் பத்திரிகையில் வெளியிடப்பட்டு வரும் கட்டுரைகளில் இதுவும் ஒன்று என்பது விசாரணைகளின் முடிவில் உறுதியாகும் என நான் நம்புகின்றேன்.

பொறுப்புள்ள பத்திரிகா தர்மம் மற்றும் ஊடகவியல் கோட்பாடுகள் என்ற போர்வையில் தேசிய நலன்களுக்கு எதிராகச் செயற்படும் உங்கள் பத்திரிகையின் விசமத்தனமானதும் குரூரமானதுமான செயற்பாடுகளையும் இந்த விசாரணைகள் அம்பலப்படுத்தும்.

நாட்டின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதுகாப்பதற்காகப் போராடும் நெஞ்சுரம் மிக்க எமது வீரர்களின் வீரதீரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் எதிரியின் நோக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு அதிக பந்திகளை (அல்லது பக்கங்களை) ஒதுக்குவதாக எனது மூத்த அதிகாரிகள் குற்றஞ் சுமத்தும் தங்கள் பத்திரிகையின் முகமூடியை இந்த விசாரணைகள் கிழித்து உண்மையை அம்பலப்படுத்தும் என்பதிலும் எனக்கு ஐயமேதுமில்லை.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


KONICA COLOUR LAB

★ உங்கள் இல்லங்களில் நிகழும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு வீடியோப் படம், கலர்ப்போட்டோ பிடித்திட வேண்டுமா?
★ உங்கள் படங்களை நேரடியாக பலகைகளில அல்லது பிளாஸ்டிக் போர்ட்டுகளில் பிறிண்ட் செய்துகொள்ள வேண்டுமா?
★ அழகிய முறையில் அல்பம் தயாரிக்கவேண்டுமா?
★ உங்கள் மறக்கமுடியாத நிகழ்வுகளை வீடியோ கசட் நாடாவில் இருந்து CDயில் பதிவு செய்து பலநூற்றாண்டுகள் பாதுகாக்க வேண்டுமா?
★ நினைவை விட்டகலாத நிகழ்வுகளின் கலர், கறுப்பு வெள்ளைப் பட பிரதிகளை DURO GUARD முறையில் பிரதிபண்ண வேண்டுமா?

இவை அனைத்தையும் ஒரே இடத்தில்
பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

கொனிகா கலர் லாப்

14, ஸ்ரீ வெங்கடேசன்வீதி (பெருமாள்கோயிலருகில்)
யாழ்ப்பாணம். T.P.3493
(C/17939)

மீண்டும் குதூகல ஆரம்பம்
ஜெயபிரதா நகை மாடம்

மீண்டும் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

22 கரட் தங்க நகைகளை ஓடர்செய்து பெற்றிடலாம்.

*175A, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
ஜெயபிரதா ஸ்தாபனத்தினர்.
(91306)

O/L PAPER CLASS
*இலவசமான முதல் 10 வகுப்புகளில்*
தரம் 10 - அலகு 1 தூர, வேக - நேர வரைபுகள்
*இம் முறை இரு இடங்களில் மாத்திரம்*
O/L தரம் 10 மாணவர்களுக்கானது

| SUBRA(14) | சித்தி விநாயகர் |
|---|---|
| சித்தன்கேணி | மல்லாகம் |
| 21/08/2001 | 21/08/2001 |
| காலை 7மணி | காலை 10மணி |

*வடக்கின் ஒரேயொரு அதிமுன்னனி ஆசிரியர்*
விஞ்ஞானம் : GRAPHS குமரன்
குடாநாட்டின் சகல மாணவர்களும் பங்குபற்றலாம்.
(91272)

IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS

Quality Computer Education
At
Low Cost...
HOW !!
WALK TO IBMS



யாழ் மாவட்டத்திலேயே முதன்முதலில் மாபெரும் கணனிக்கண்காட்சியை நடாத்திய எமது நிறுவனத்தில் நீங்களும் இணைந்து கொள்ள **மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்.** ஆம் எமது நிறுவனம் 2வது தடவையாக புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக திறந்த போட்டிப் பரீட்சையை நடாத்தவுள்ளது. இப் புலமைப்பரீட்சையில் மாணவர்கள் குறித்த புள்ளிகளைப் பெறுவதன் மூலம் நீங்களும் புலமைப்பரிசிலைப் பெற்று IBMS ல் இணைந்துகொள்ளலாம்.

WHY STUDY AT IBMS ?

- Qualified & Experienced Lecturers.
- Individual Training.
- Installment Payment Method.
- Recognized by ITrain[USA], ACTOS and other International Organisations.
- More than 35 Computers in Lab & Unlimited Practical Hours.
- Classes can be arranged to suit students' convenience.

Choice of Courses

Higher Diploma in Software Engineering (12 Months)
Diploma in Information Technology (8 Months)
Advanced Programming Specialist (6 Months)
Diploma in Business Applications[Ms Office] (5 Months)
Diploma in JAVA Language (3 Months)
Diploma in Desktop Publishing (3 Months)
Diploma in Webpage Designing (3 Months)
O/L Student Course.(O/L பரீட்சைக்குப் பிந்திய கணனிப் பயிற்சித் திட்டம்)

உங்கள் பெயர், முகவரி, கற்க விரும்பும் பாடம் என்பனவற்றுடன் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை நேரிலோ அல்லது தபாலிலோ Director, IBMS, No 701 K.K.S Road, Jaffna எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Head Office :
*IBMS,*
*[Affiliated to Barrington University of USA]*
*No.701, K.K.S Road,*
*Jaffna.*
Phone: 021-3165
Email: ibmsjaf@yahoo.com
ibmsjaf@altavista.com

Branches:
*NMMV Road, Nelliyady.*
*Main Road, Chankanai.*

IBMS IT EDUCATION FOR THE NEW GENERATION

IBMS IBMS IBMS IBMS IBMS IBMS IBMS


நினைவுகள் துளிர்க்கட்டும்........
கடமைகள் உதிக்கட்டும்........

## இரண்டாம் மாத நினைவஞ்சலியும்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



## அமரர் பொன்.சபாபதி

(கிளிநொச்சி மாவட்ட முன்னாள் கல்விப்பணிப்பாளரும்,
வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் வன்னி இணைப்பாளரும்)

| சாதிக்க வந்தது: | சாதித்துச் சென்றது: |
|---|---|
| 01-02-1938 | 19-06-2001 |

தரணியில் வந்து நாம் பிறந்தது பெரிதில்லை.....
தந்தையாய் உங்களைப் பெற்றதே பெரும் பேறு.
சிரம்தனை நிமிர்த்தி நீர் சீருடன் வாழ்ந்ததால்.....
சிறப்புடன் நாங்களும் இனிதுற வாழ்கின்றோம்.
தரம் அறி யாயமன் சடுதியில் உந்தனைத்.....
தன்னிடம் அழைத்ததால் தவிக்கின்றோம் இன்றுநாம்.

கடந்த 19-06-2001இல் அமரராகிவிட்ட ஏழாலையைச் சேர்ந்த அமரர் பொன்.சபாபதி அவர்களின் இறுதி நிகழ்வுகளில் பங்குகொண்டும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு இன்று (19-08-2001) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*"துளசி", ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*
(91292)
-குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.